விலை ரூபா: 6:00 | பக்கங்கள்:-பத்து | Registered as a News paper in Sri Lanka

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்

பி.ஜே.பர்னான்டோ
இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | தை04 சனிக்கிழமை (18 .01.2003) | தொலைபேசி- 2223378 | ஒலி-30

## பொங்கு தமிழ் நேற்று மீண்டும் பொங்கி எழுந்தது

(யாழ்ப்பாணம்)

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் இரண்டாம் ஆண்டு நிறைவு நிகழவு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று உணர்வு பூர்வமாக இடம் பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால முன்னெடுக்கப்பட்ட இந் நிகழ்வையொட்டி வளாகம் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு பொங்கு தமிழ் வாசகங்கள் பொறிக்கப்பட்ட கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் க.பரணீதரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றி வைக்க பொது ஈகச் சுடரினை புலிகளின் மூத்த தளபதி சரா ஏற்றி வைத்தார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன் பொங்கு தமிழ்ச் செய்தியைச் சமர்ப்பித்தார். தொடர்ந்து "எமது நிலம் எமக்கு வேண்டும்" என்ற வாசகம பொறிக்கப்பட்ட பொங்கு தமிழ்ப் பிரகடனம் (10ம் பக்கம் பார்க்க)

## அரச தனியார் ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் !

### நிதியமைச்சர் சொக்ஸி தகவல்

(கொழும்பு)

அரசாங்க,தனியார் துறை ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துவருவதையடுத்து, அவர்களின சம்பளங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

இச் சம்பள அதிகரிப்பு சம்பந்தமாக கே.என்.சொக்ஸி தகவல் தருகையில்;

முன்னைய அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட்ட சம்பள நிர்ணய் ஆணைக்குழுவின் சிபார்சுகள் இச் சம்பள அதிகரிப்பின் போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.கடந்த வருடம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி திருப்தி (10ம் பக்கம் பார்க்க)

# புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிடுவது சாத்தியமில்லை!



## அமைச்சர் பீரிஸ் கருத்து

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் நீண்டகாலமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள் இதனால் அவர்கள் ஆயுதக் கலாசாரத்தை முழுமையாகக் கைவிட்டுவிடுவது சாத்தியமில்லை அது அவர்களுக்கு கடினமான காரியமாகும் இருந்த போதும் அவர்கள் இப்போது அரசியல் கலாசாரத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் தெரிவித்தார்!**

கடந்த நான்கு மாத காலமாக அரசுக்கும விடுதலைப் புலிகளுக்கும் டையில் நடைபெற்று வரும் பல சுற்றுப் பேச்சுவார்த்தை தொடர்பாக இலங்கைக்கான பன்னாட்டுத் தூதுவர்களுக்கும்,இராஜதந்திரிகளுக்கும் விளக்கம்' அளிக்கும் கூட்டம் ஒன்றை நேற்றுக் காலை நடத்திய போதே அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரது அமைச்சு அலுவலகத்தில் நடை பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து விளக்கம் அளிக்கும் இக் கூட்டத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கைக்கான வெளிநாட்டு இராஜதந் திரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இறங்கியுள்ள விடுதலைப் புலிகள் சர்வதேச ரீதியில் உள்ள அரசியல் நிபுணர்களின் ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் பெறும் நிலையிலுள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## சதுரங்கப் போட்டியில் யாழ். வீரர் சாதனை

யாழ்.மாவட்ட சதுரங்க வீரர்,இலங்கைச் சதுரங்கச் சம்பியனை; சதுரங்கப் போட்டியில். வென்று சாதனை படைத்துள்ளார்.

யாழ்.சதுரங்க வீரர் வி.ரி.எஸ்.சிவோதயன் இலங்கை சதுரங்க சம்பியன் நிரோஸ் டி.சில்வாவை கொழும்பில் நடை பெற்ற சதுரங்கப் போட்டியில் வென்று சாதனை படைத்துள்ளதுடன்,யாழ்.மாவட்டத்தின் பெருமையையும் நிலை நாட்டியுள்ளார்.

கடும் போட்டியாக இருவருக்கும் இடையில் 4மணித்தியாலங்கள் தொடர்ந்த போட்டியில் 69 ஆவது காய் நகர்த்தலில் சிவோதயன் வெற்றியடைந்தார். (10ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டன் தூதுவர் ஸ்ரீபன் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

(கொழும்பு)

பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீபன் எவான் தலைமையிலான 6பேர் கொண்ட குழுவினர் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

நேற்றைய தினம் வவுனியாவுக்கு வருகை தந்த இக்குழுவினர்,புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்பட்டுளள மாற்றங்கள்,முன்னேற்றங்கள் குறித்து,வவுனியா மாவட்ட அரசியல் அரச அதிபர் கே.கணேஷ், வன்னி மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால,ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் (10ம் பக்கம் பார்க்க)

## தூதுவர் அகாஷியை சந்திக்க ஜனாதிபதி சந்திரிகா மறுப்பு

(கொழும்பு)

யப்பானின் விஷேட தூதுவர் யசூசி அகாஷியை சந்திப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மறுத்துள்ளார்.

ஜனாதிபதி குமாரதுங்கா நேற்று ஜனாதிபதி மாளிகையில் தூதுவர் அகாஷியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இறுதி நேரத்தில் அச் சந்திப்பு இடம் பெறவில்லை.அரசியல் கூட்டமொன்றில் ஜனாதிபதி கலந்து கொண்டதனால்,தூதுவரை சந்திக்கமுடியவில்லை என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை கடந்த வருடம் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனையும் ஜனாதிபதி சந்திப்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## யப்பான் தூதுவர்-பிரதமர் நேற்று சந்தித்து பேசினர்

(கொழும்பு)

யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி,நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையில் இடம் பெற்ற இச் சந்திப்பில்,பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட,அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீஎல்.பீரிஸ்,மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் சமாதான முயற்சிகள் குறித்து விளக்கிக் (10ம் பக்கம் பார்க்க)

## ஆட்சியை மாற்றியமைக்க எதிர்க் கட்சி பகீரத முயற்சி!

### இரகசியப் பேச்சுக்கள் நடக்கிறது

(கொழும்பு)

பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திக்காமலேயே தற்போதைய அரசாங்கத்தைமாற்றியமைக்கும் முயற்சிகளில் எதிர்க்கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலின் போது பொது ஜன ஐக்கிய முன்னணி அரசில் இணைந்து கொண்ட தென்னிலங்கையின் செல்வாக்கு மிக்க அரசியல்வாதி ஒருவர் மீண்டும் பொது ஜன ஐக்கிய முன்னணியில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதையடுத்தே அரசை மாற்றுவதற்கான தீவிர முயற்சிகளில் எதிர்க்கட்சியினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேலும் சில உறுப்பினர்களைத் தம்பக்கம் இழுப்பதற்காக பெருமளவு பணத்தை வாரி (10ம் பக்கம் பார்க்க)

ஹற்றன் நஷனல்
அடகு வைக்கும் வசதி
வாரத்தில் ஆறு நாட்கள் சனிக்கிழமை உட்பட

ஒரு பவுணுக்கு ரூ. 6325/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி1.8% மட்டுமே!
மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்
ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி: 021-2222787,021-2223463
தொலை நகல்: 021-2223194
[C/5501]

★ குடாநாட்டு மக்கள் மேம்பாடு கருதி

# குறுங்காலத் திட்டங்களை அமுலாக்க உலக வங்கி தயார்

## உலக வங்கி உபதலைவர் செயலக கலந்துரையாடலில் உறுதி

(தென்மராட்சி)

**யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ். குடா நாட்டு மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு குறுங்காலத் திட்டங்களை அமுல் செய்வது காலத்தின் தேவையாகும். எனவே குறுங்காலத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு உலக வங்கி தயாராகவுள்ளது.**

நேற்றைய தினம் யாழ். அரச செயலகத்திற்கு வருகை தந்திருந்த உலக வங்கியின் உபதலைவரான பேராசிரியர் நீக்கோ நிசுமிசு அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் உலகவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் கறோல்ட், வெளிவிவகார அமைச்சின் முகாமையாளர் டேல் லவரன் பேக், உலக வங்கியைச் சேர்ந்த நரேஸ் துரைசாமி, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மேலதிக அரசாங்க அதிபர் உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் என். சிவராஜா, திட்ட இணைப்பாளர் பு. சுந்தரம்பிள்ளை, பிரதேச செயலர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கு கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலின் போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன், யாழ்ப்பாண மாவட்டத்தின் இப்போதைய நிலை, பிரச்சினைகள், மற்றும் தேவைகள் பற்றிய புள்ளிவிபரங்களைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

உலகவங்கியின் உபதலைவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடும் போது;

### அவசர பணி

நாட்டில் சமாதானமும் அமைதியும் திரும்பிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இடம் பெயர்ந்து சென்றவர்கள் மீளவும் குடியமர்கின்ற போது அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது மிகவும் அவசரமாகக் கருதப்படுகின்றது. எனவே நீண்ட காலத் திட்டங்களை அமுல் செய்வதிலும் பார்க்க குறுங்காலத் திட்டங்களை அமுல் செய்வதே இன்றைய நிலையில் பொருத்தமாகும்.

எனவே, நாம் குறுங்காலத் திட்டங்களை பாதிக்கப்பட்ட மக்களின் நன்மை கருதிச் செயல்படுத்த வேண்டும். யுத்தத்தினால் சீரழிந்த நிலையிலுள்ள வேறு நாடுகளிலும் இவ்வண்ணமே செய்யப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பேசுகையில்,

20 வருட கால யுத்தத்தின் காரணமாக குடா நாட்டில் மீனவர்கள், விவசாயிகளின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டு விட்டது. வீதிகள் பாலங்கள் பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இவை புனரமைக்கப்படுவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேன்மையடையும். இது விடயத்தில் உலக வங்கி ஒத்துழைப்பு நல்க முன்வர வேண்டும் என்று கூறினார்.

உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதியும் யாழ். மருத்துவக்கல்லூரியின் விரிவுரையாளருமான டாக்டர் என். சிவராஜா அங்கு கூறுகையில்,

### நிலத்தடி நீர் பாதிப்பு

குடாநாட்டில் நிலத்துக்கு அடியில் இருக்கும் நீர் அசுத்தப்படுத்தப்பட்டு வருவதால், குடாநாட்டு மக்கள் தொற்று நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இங்கு இரசாயனப் பாவனை அதிகரித்து வருவதால் நிலமும் நீரும் பாதிக்கப்பட்டுவருகின்றது எனவே, நெடுங்காலத் திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்டகுடிநீர் விநியோகத் திட்டங்கள் அமுல் செய்யப்படவேண்டும் என்றார்.

செயலகக் கலந்துரையாடலை முடித்துக் கொண்ட உலக வங்கிக்குழுவினர் தென்மராட்சி பிரதேசத்துக்கு விஜயம் செய்து, அங்கு யுத்தத்தினால் சேதமடைந்த கட்டங்களைப் பார்வையிட்டதுடன், தென்மராட்சி பிரதேச செயலர் க. சேதீஸ்வரனால் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலிலும் பங்கு பற்றினர்.

அதனைத் தொடர்ந்து வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம் பெற்ற கலந்துரையாடலிலும் பங்கு பற்றினர். அதன் பின்னர் வலிகாமம் மேற்கிலுள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்துக்கும் உலக வங்கியின் உபதலைவர் விஜயம் செய்தார். (உ-77)

## அமெரிக்காவை எதிர்க்க மக்கள் முன்வர வேண்டும்

### முஸ்லிம் அமைப்புகள் கோரிக்கை

(கொழும்பு)

இந்த நாட்டில் மனிதாபிமானத்தை நேசிக்கும் அமைப்புகள், சக்திகள் அனைத்தும் ஈராக் மக்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தவும் அமெரிக்கா மீது எதிர்ப்பைத் தெரிவிக்கவும் முன்வரவேண்டும் என்று முஸ்லிம் அமைப்புகள் பல வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் இலங்கை பொருளாதார ரீதியாக பல பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்கலாம் என்றும் இவ் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கை மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணெய் வளத்திலும் பொருளாதாரத்திலும் தொழில் வாய்ப்புக்களிலும் தங்கிஇருப்பதால் அமெரிக்கா ஈராக் மீது தாக்குதல் நடத்தும் பட்சத்தில் உலக சந்தையில் எண்ணெய் விலைகள் உயர்வடையும்போது இந்நாட்டிலும் எண்ணெய் விலை உயர்வடைந்து எமது மக்களின் பொருளாதாரச்சுமைமேலும் உயர்வடைவதுடன் உள்நாட்டில் பொருட்களின் விலை உயர்வடையும்.

மத்திய கிழக்கு கடல் பிராந்தியத்தில் அமைதியின்மை ஏற்படும் போது அப்பகுதிகளில் கப்பல் பிரயாணம் பாதிக்கப்படும்.

அவ்வாறு பாதிக்கப்பட்டால் எமது ஏற்றுமதிகள் தடைப்படுவதோடு ஏற்றுமதி இறக்குமதிவர்த்தகமும் பாதிப்

(5ம் பக்கம் பார்க்க)

## இலவச மருத்துவ முகாம் இரு நாட்கள்

(சண்டிலிப்பாய்)

மெடி குயிக் பிறைவேட் லிமிட்டெட்டின் அனுசரணையுடன் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்றும் நாளையும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இடம் பெறவுள்ளது.

இதில், மகப்பேற்று நிபுணர்கள், பொது வைத்திய சாலை நிபுணர்கள், யாழ். போதனா வைத்திய சாலையின் சிரேஷ்ட வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கவுள்ளனர். (உ-258)

## பிரபா-ரணில் உடன்படிக்கையால் உல்லாசப் பயணிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டில் 3 இலட்சத்து 93 ஆயிரம் உல்லாசப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என உல்லாசத்துறை தரவுகள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நாட்டில் அமைதி தோன்றியதை அடுத்தே உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக உல்லாசத்துறைத் தலைவர் பட்டிவிதான தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து கடந்த ஆண்டு உல்லாசப்பயணிகளின் வருகை 16,7 வீதத்தால் அதிகரித்துள்ளது.

சமாதான நடவடிக்கைகள் தொடரும் அதே வேளைசந்தைப்படுத்தல்களும் அதிகரிக்கப்படுமாயின் இவ்வருடம் பயணிகளின் வருகை 5 இலட்சமாக உயரும் எனவும் பட்டிவிதான நம்பிக்கை தெரிவித்துள்ளார். (உ-8)

## மாதாந்த கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தி வரும் மாதாந்த கருத்தரங்கில் நாளை பி.ப. 4.30 மணிக்கு மன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் ''நாட்டுக் கூத்து பிரதியாக்கமும் மதிப்பீடும்'' என்னும் பொருளில் கலாபூஷணம் பாஷையூர் தேவதாசன் கருத்துரை வழங்கவுள்ளார். (உ-3)

## 'பலன்ஸ் ஸ்ரையில்' அமெரிக்க- இலங்கை கூட்டுப் பயிற்சி மார்ச் வரை தொடரும்

### அமெரிக்கத் தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

'பலன்ஸ் ஸ்ரையில்' எனும் பெயரில் அமெரிக்க-இலங்கை படையினரின் கூட்டுப் பயிற்சி இலங்கையில் நடைபெற்று வருகிறது. இம்மாதம் ஆரம்பித்திருக்கும் இப்பயிற்சி மார்ச் மாத ஆரம்பம் வரை நடைபெறவுள்ளது.

மேற்படி படைகளின் கூட்டுப் பயிற்சியானது தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் பயிற்சிகளில் ஒன்பதாவது என்று அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில்,

இக்கூட்டுப் பயிற்சி ஒரு பாரம்பரிய நிகழ்வாகிவிட்டது. பிராந்திய உறுதிப்பாட்டை மேம்படுத்தும் இது இரு நாடுகளுக்குமிடையில் உறவுகளை வலுப்படுத்துகிறது ஆண்டுதோறும் நடைபெறும் இப்பயிற்சியின் மூலம் ஒரு நாடு மற்றைய நாட்டின் நுட்பங்களை அறிந்துகொள்ளுகின்றது. மிகப்பிந்திய இராணுவ நுண்முறைகள், சாதனங்கள் பற்றி இருதரப்பும் அறிந்து கொள்கின்றன.

இவ்வாண்டின் பயிற்சிகளில் இருநாடுகளினதும் தரைப் படைகளும், கடற்படைகளும் ஈடுபடுகின்றன. கூட்டு ஆயுத நடவடிக்கைகள், மருத்துவ நுண்முறைகள், இராணுவ நடவடிக்கைகள், மேலும் படைத்துறை திறன்கள் பற்றி இப்பயிற்சிகளின் போது கவனம் செலுத்தப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா தொடுக்கவிருக்கும் யுத்தத்தில் இலங்கை எவ்விதத்திலும் சம்பந்தப்படக்கூடாது என்று எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை எச்சரித்திருந்தமையும் அவ்வாறான ஒரு போர் தொடங்கினால் அதில் இலங்கையின் வான்பரப்பையும், துறைமுகங்களையும் பயன்படுத்துவதற்கான அனுமதியை அமெரிக்கா இலங்கையிடம் கோர உத்தேசித்துள்ளது என்று அமெரிக்க தூதுவர் அஷ்லி வில்ஸ் தெரிவித்திருந்ததும் கருத்தில் கொள்ளத்தக்கது. (உ)

## இந்து சாதனம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் 'இந்து சாதனத்'தின் ஐப்பசி, கார்த்திகை மாத இதழ்கள் வெளிவந்துள்ளன. (உ-8)

# இன்றைய இலக்கணத் தேவைகளுக்கு உதவும் கையடக்கமான நூல் "தமிழ் இலக்கணப் பூங்கா"

எள்ளிலிருந்து அதன் சாறான எண்ணெய் பெறப்படுவது போல, வாய்மொழி இலக்கியங்கள் பேச்சு வழக்கிலிருந்து அவற்றுள் இலட்சண மானவற்றை வரையறைகளாகத் தொகுத்துப் பெறப்பட்டவையே இலக்கணங்கள். இந்த ஆதி இலக்கண நூல்களில் இன்று நமக்குக் கிடைக்கும் மிகப் பழைமை வாய்ந்தது தொல்காப்பியம். அதனை அடியொற்றிக் கால வகையினால் தாமாகப் புகுந்த மாற்றங்களோடு காலத்துக்குக் காலம் வீரசோழியம், நன்நூல், இலக்கணச் சுருக்கம் முதலான நூல்கள் தோன்றி வந்துள்ளன. ஆறுமுக நாவலரின் இலக்கணச் சுருக்கம் மிகவும் பிற்பட்ட கால -20 ஆம் நூற்றாண்டுக் காலத் தமிழ் இலக்கண வழக்கின் சிறந்த பிரதிபலிப்பாக விளங்குகின்றது. தமிழைப் பயில்பவர்கள் பேசுபவர்கள் எமது பழைய இலக்கியங்களைப் புரிந்துகொள்ள உதவுவதோடு, சொந்தக் கருத்துக்களைத் தெளிவாகக் கூர்ப்பாக-காலத்துக்கேற்ற வகையில் வெளியிடவும் விளங்கிக் கொள்ளவும் உதவவேண்டிய கடப்பாடு எங்கள் தமிழுக்குமுண்டு.

### தாய்மொழிக் கல்வி

இன்று தாய்மொழி மூலம் கல்வி வழங்கப்படும் இலங்கையில் ஒரு பிள்ளையின் கல்வி மொழியாகிய தமிழில் அவனுக்கு அதிக தேர்ச்சி கட்டாயமாக அமையவேண்டியுள்ளது. அதேவேளை, அவனது பெரும் பகுதி நேரம் விடய ஞானம் பெறுவதிலேயே செலவிடப்படவேண்டியிருப்பதால் மொழிக் கல்விக்குப் போதிய நேரத்தை அவன் ஒதுக்க முடியாதுள்ளது.

| | | |
|---|---|---|
| நூல் | : | தமிழ் இலக்கணப் பூங்கா |
| ஆசிரியர | : | பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் |
| வெளியீடு | : | பொன்னெழுத்துப் பதிப்பகம் இனுவில் |
| விலை | : | ரூ.150 |

இன்றுள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் எழுதும் தமிழில் வழுக்கள் நிறைந்து காணப்படுகின்றன. இக்குறைபாடு வளரவிடப்படுவது, மாணவர் கல்வி வளர்ச்சிக்கும் அதேநேரம் தாய்மொழி நிலைபேற்றுக்கும் தீங்கு விளைத்து விடும். இந்த அவலத்தைப் போக்க இலகு தமிழ் இலக்கண நூல்கள், கவர்ச்சியான இலக்கணங் கற்பித்தல் விரகுகள் என்பன அறிமுமாக்கப்பட வேண்டியது இன்றியமையாத காலத்தின் தேவையாகும்.

### தமிழ் இலக்கணப் பூங்கா

ஓரளவாயினும் இத்தன்மைகள் பொருந்தியாதாகப் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களால் எழுதப்பட்டு 3 ஆவது பதிப்பாக வெளிவந்துள்ளது **தமிழ் இலக்கணப் பூங்கா**. இந் நூலில் போதிய சமகால உதாரணங்களோடு, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் நடையில் இலக்கண உண்மை கள் சிறு குறிப்புகளாக அமைககப்படடுள் ளன.

இதன் முத லாம் பதிப்பிற்கு இலக்கிய கலாநிதி பண்டிதமணி




## திறனாய்வுக்களம்

அவர்கள் வழங்கிய ஆசியுரை தொடக்கம், இந்நூல் தமிழ் இலக்கணத்தின் அடிப்படை உண்மைகள் அனைத்தையும் தொகுத்துக் கையடக்கமாக-கவர்ச்சிகரமாக வழங்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. தமிழரான ஆசிரியர்கள், மாணவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

**நா.சிவசிதம்பரம்**
**ஆசிரியர்**

---

## விலைகுறைப்புக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

ஷெல்காஸ்சிலிண்டர் ஒன்றின் விலையை 45 ரூபாவால் குறைப்பதற்கான நியாய வர்த்தக ஆணைக்குழுவின் உத்தரவுக்கு எதிராகமேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஷெல் காஸ் நிறுவனம் நியாய வர்த்தக ஆணைக் குழுவுக்கு எதிராகவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளது. (உ-8)

## மாணவர்களுக்கு உபகரணங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கல்வி பயின்று வரும் முன்பள்ளி மாணவர்களுக்கான ஆரம்பக் கல்வியை ஊக்குவிக்க ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான முன்பள்ளி மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்க யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது. (உ-8)

---

# உள்நாட்டு அரசியல் சிக்கலால் சமாதானத்தை இழந்துவிடக்கூடாது

## உலகப் பொருளியல் நிபுணர் ஜெப்ரி அறிவுரை

(கொழும்பு)

உள்நாட்டு அரசியல் சிக்கல்களுக்குள் மாட்டிக்கொண்டு நிரந்தர சமாதானத்திற்குக் கிடைத்திருக்கும் வரலாற்று ரீதியான வாய்ப்பை இழந்துவிடக்கூடாது.

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள உலகப் பிரபலம் பெற்ற பொருளியல் நிபுணர் பேராசிரியர் ஜெப்ரிசச்ஸ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், வேறும் சில அமைச்சர்களையும் சந்தித்து உரையாடிய பேராசிரியர் சச்ஸ், மத்திய வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கொன்றிலும் உரையாற்றினார்.

அவர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரு தசாப்தங்களில் இலங்கை உயிர்கள் விடயத்திலும் பொருளாதார ரீதியிலும் போதிய விலை கொடுத்து விட்டது. சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் முழு மனதுடனான ஆதரவை வழங்குகிறது.

ஆனால், உள்நாட்டு அரசியல் கூச்சல் குழப்பங்களுக்கு இடம்கொடுத்து சமாதான முன்னெடுப்புக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொளவது உலக சமூகத்துக்கு வேதனை தருவதாகும்.

சமாதானத்தைக் • கொழும்பு மட்டும் அனுபவிப்பதல்ல. முழு நாடுமே அனுபவிக்கப் போகிறது என்று குறிப்பிட்டார்.

லத்தீன் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா, ஆசிய, ஆபிரிக்காவின் பல நாடுகளுக்கு பொருளாதார ஆலோசகராக விளங்கும் திரு. சச்ஸ் பொருளாதார முன்னெடுப்பிலும், யூன் மாதம் ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டிற்கான திட்டங்களை தயாரிப்பதிலும் தனது ஆலோசனையை வழங்கிவருகின்றார். (இ)

---

### சட்ட விதிகளுக்கு முரணாக

## திணைக்களத் தலைவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை

(கொழும்பு)

சட்டவிதிகளுக்கு முரணாக 'பிரமுக' தனியார் வங்கியில் அரச பணத்தை வைப்புச் செய்தமைக்காக 33 அரச திணைக்களத்தலைவர்களுக்கு மொத்தம் 40.5 மில்லியன் ரூபா ஊக்குவிப்பு வழங்கப்பட்டமை தெரியவந்ததை அடுத்து அது தொடர்பில் சி.ஐ.டீ யினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

1997-2002 ஆண்டுக் காலப்பகுதியில் இதன்மூலம் 70.2 பில்லியன் ரூபா அரச பணம் வைப்புச் செய்யப்பட்டது.

அரச பணத்தை இவ்வங்கியில் வைப்புச் செய்து அத்தொகையின் ஒரு சதவீதத்தை அரச சிரேஷ்ட அதிகாரிகள் ஊக்குவிப்புப் பணமாக பெற்றுக்கொண்டுள்ளது தொடர்பாகவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரச பணத்தை தனியார் வங்கிகளில் வைப்புச் செய்வதற்கு 1997 ஆம் ஆண்டில் நிதியமைச்சு அனுமதி வழங்கியிருந்ததாக சி.ஐ.டீ யினர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரமுக வங்கியின் தலைவர் ரோஹன் பெரேரா அதன் பணிப்பாளர்கள் உட்பட 6 அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேறக் கூடாதென்று கொழும்பு-மாளிகாவத்தை மஜிஸ்ரேட் உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ)

---

### அறுவடைக்குத் தயாரான

## வரணி வயல்களில் பன்றிகள் அட்டகாசம்

(துன்னாலை)

வரணி வயல் நிலங்களில் பன்றிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது நெற்கதிர் முற்றிப் பயனை அறுவடை செய்யக் காத்திருக்கும் நிலையில் பன்றிகள் அவற்றை நாசம் செய்து வருகின்றன.

இதனைத் தவிர்க்கும் வகையில் இப்பகுதி விவசாயிகள் இணைந்து வயல்களில் இரவுக்காவலில் ஈடுபட்டுவருகின்றனர். (உ-41)

---

## கண்காணிப்புக் குழுத் தலைவர் இவ்வாரம் வன்னி செல்வார

(யாழ்ப்பாணம்)

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொண்ட் புறுவ் ஹொவ்டே இவ்வாரம் வன்னி செல்லவுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவதில் காணப்படும் சிக்கல்கள், புரிந்துணர்வு உடன்பாட்டிலுள்ள நடைமுறைப் பிரச்சினைகள் ஆகியன குறித்து விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் ஆராயும் வகையிலேயே இவரது பயணம் அமையவுள்ளது. (உ)

---

## உயர்பாதுகாப்பு வலய ஆலயத்தில் பொங்கல்

(வவுனியா)

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள வவுனியா, ஓமந்தை நகர்ப்பகுதிக்குள் பொங்கல் தினமான 15-01-2003 புதன் கிழமை பொதுமக்கள் முதல் தடவையாகச் சென்றதுடன், அங்குள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க வரசித்தி விநாயகர் ஆலயத்தில்பொங்கல் விழாவும் கொண்டாடப்பட்டது.

500 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் இப்பொங்கல் விழாவில் கலந்துகொண்டனர்.

அத்துடன், வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்களான கே.இராஜகுகநேஸ்வரன், என்.சிவசக்தி ஆனந்தன் மற்றும்வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ், ஓமந்தை பிரதேச இராணுவ அதிகாரி கேணல் மோசத், மேஜர் மாயாதுன்னை, மேஜர் ஜயந்த உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (உ)

---


## நல்லூர் பிரதேச சபை

## கூறுவிலை அறிவித்தல் - 2003

கீழ்க்காட்டப்படும் கற்களை வழங்கக்கூடிய விநியோகஸ்தர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. தங்கள் கூறுவிலைகளை 27.01.2003 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிடப்பட்டு அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| விபரம் | | சபை ரக்ரர் மூலம் தங்களின் கிறேசர் வந்து ஏற்றுவதற்கு | நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் தங்கள் வாகனம் மூலம் விநியோகிப்பதற்கு |
|---|---|---|---|
| 01. | கண்டகல்<br>3/4 கியூப்<br>1கியூப் | | |
| 02. | 4" கடைசார்<br>3/4 கியூப்<br>1கியூப் | | |
| 03. | 2" கிறேசர்<br>3/4 கியூப்<br>1கியூப் | | |
| 04. | 3/4" கிறேசர்<br>3/4 கியூப்<br>1கியூப் | | |
| 05. | 5/8" கிறேசர்<br>3/4 கியூப்<br>1கியூப் | | |
| 06. | 1/2" கிறேசர்<br>3/4 லோட்<br>1கியூப் | | |
| 07. | கிறேசர் டஸ்ற்<br>3/4 கியூப்<br>1கியூப் | | |

க.மணிபல்லவராஜன் (ஜே.பி.யு.எம்).
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

(c/5633)

# ஐவரிக்கோஸ்ட் தீவிரவாதிகள் மீண்டும் உடன்பாட்டை மீறினர்

(அபிட்ஜான்)


ஜவரிக் கோஸ்ட் தீவிரவாதிகள் கடந்த சில தினங்களுக்கு முன் கைச்சாத்திட்ட யுத்தநிறுத்த உடன் படிக்கையை மீறியுள்ளனர். என்று ஜவரிக்கோஸ்ட் பாதுகாப்பு அமைச்சு கெடற்பேர்டின் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த சில மாதங்களாக நிலவி வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஜவரிக் கோஸ்ட் அரசாங்கமும் அங்குள்ள முன்று முக்கிய தீவிரவாதக் குழுக்களும் யுத்த நிறுத்த உடன் படிக்கையில் கைச்சாத்கிட்டிருந்தனர்.

இதனையடுத்து சமாதானப் பேச்சு வார்த்தைகள் பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் ஜவரிக்கோஸ்டின் பொலிகியூம் நகரில் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

எனினும் பாரிஸில் இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதுவித குழப்பங்களும்இன்றித் தொடர்ந்தவண்ணமேயுள்ளதாகவும் அதேவேளை தீவிரவாதக் குழுக்களின் இத்தாக்குதல் நட வடிக்கைகள் பாரதுாரமானதொரு செயல் என்று கெடற் பேர்டின் மேலும் கூறியுள்ளார். (பி-2)

WORLD NEWS உலக தரிசனம்



ஜோர்டான் நாட்டின் கல் நகரமான பெட்ரா நகரில் எடுக்கப்பட்டது. இப்புகைப்படம், பெட்ரா நகரில் உள்ள கற்சுவர்களுக்கு மத்தியில் நடந்துவரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைப் படத்தில் காண்கின்றீர்கள்.

## மொஸ்கோ கலையரங்கு நிகழ்வு
# பாதிக்கப்பட்டோர் நஷ்டஈடு கோருகின்றனர்

(மொஸ்கோ)

ரஷ்சியத் தலைநகர் மொஸ்கோவில் இடம்பெற்ற கலையரங்கு சிறைவைப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள், அந்தப் பகுதியின் மாகாண அரசு மீது நஷ்டஈடுகோரி வழக்குத் தொடர்ந்துள்ளார்கள்.

கடந்த ஒக்டோபர்மாதம் மொஸ்கோவிலுள்ள கலையரங்கமொன்றில் சுமார் 700பொதுமக்கள் தீவிரவாதிகளால் பயணக்கைதிகளாகச் சிறைவைக்கப்பட்டிருந்தனர்

இவர்களை மீட்பதற்காக அந்த நாட்டின் பொலிஸார் பயன்படுத்திய கண்ணீர் புகை காரணமாக 130 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்க சரியான முறையினை ரஷ்ய அரசு பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை முன் வைத்தே ரஷ்ய அரசாங்கத்திற்கு எதிராகப் பாதிக்கப்பட்டவர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளனர். (பி-2)

### பாக். இடைத்தேர்தல் மோதல்களில் ஐவர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் நடைபெற்ற இடைத் தேர்தலின போது இடம்பொற்ற வன்முறைச் சம்பவங்களால் 5பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர்பூட்டோவின் எதிர்கட்சி உறுப்பினர்களுக்கும் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டது என்றும் இதன் போது உயிரிழந்த ஐவரும் பெனாசிர் பூட்டோவின் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது. (பி-2)

### ஈராக் போரில் ஜேர்மனியின் நிலைப்பாடு

(பேர்லின்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையின் ஈராக் மீதான போருக்கு ஆதரவாக ஜேர்மனி வாக்களிக்கும் என்பதைத் தன்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாதென ஜேர்மனியின் பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் ரொக் கூறியுள்ளார்.

பாதுகாப்புப் பேரவையில் நடத்தப்படும் வாக்கெடுப்பு முடிவுகளை வைத்தே இறுதித் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் எனக்கூறியுள்ள அவர் போருக்கான ஆதரவை ஜேர்மனியிடமிருந்து எதிர்பார்க்க முடியாதெனக்தெரிவித்துள்ளார். இது தொடர்பான அறிக்கை யொன்றை ஜேர்மனியின் உயர்மட்ட அதிகாரிகள் வெளியிட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும். (பி-2)

## ஆபிரிக்க நாடுகளில் உணவுப்பஞ்சம்
# பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழக்கும் அபாயம்

(ஜெனிவா)

ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையினால் அங்குள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழக்கக் கூடிய நிலை ஏற்படலாமென ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக உணவுத்திட்டம் தெரிவிக்கின்றது.

ஆபிரிக்க நாடுகளிலுள்ள சுமார் 14.4 மில்லியன் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் குறிப்பாக சம்பியாவில் வாழும் 5 இலட்சம் மக்கள் உணவு, உறைவிடங்கள் எதுவுமின்றி அவதியுறுவதாக உலக உணவுத் திட்ட அமைப்புக் கூறியுள்ளது.

அத்துடன் இவர்களுக்கு உதவும வகையில் சர்வதேச சமூகம் முன் வரவேண்டுமென இந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (பி-2)

### மண்சரிவில் சிக்கி 20பேருக்கு மேல் பலியாகினர்

(பிறேசில்)

பிறேசிலின் மத்திய பகுதியில் பெய்துவரும் கடும்மழையினால் ஏற்பட்ட மண் சரிவில்சிக்கி 20இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன், 70பேர் வரையில் காயமடைந்துள்ளனர். (பி-2)



இந்திய இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் நிர்மல் சந்த் விஜ் அளித்த விருந்தில் கலந்து கொண்ட பிரதமர் வாஜ்பாய், குடியரசுத் துணைத் தலைவர் பைரோன் சிங் ஷெகாவட்.

## அரபு நாடுகளின் யோசனைப்படி
# ஈராக் அதிபர் சதாம் ஹுசேன் வேறு நாட்டுக்கு தப்பிச்செல்வாரா?

(கெய்ரோ)

போரைத் தவிர்க்கும் வகையில் ஈராக் அதிபர் தம்குடும்பத்துடன் வேறுநாட்டுக்குத் தப்பிச் செல்ல வேண்டும் என அரபு நாடுகள் சில யோசனை கூறியுள்ளன.

அமெரிக்காவுடன் போரில் ஈடுபட ஈராக் விரும்பவில்லை.அதே நேரத்தில் போரை எங்கள் மீது அமெரிக்கா திணித்தால் திருப்பித் தாக்குவோம் என்று சதாம் ஹுசேன் கூறியுள்ளார்.

ஈராக்அரசுக்கு சொந்தமான தொலைக்காட்சியில் அவர் பேசினார்.

போரிடாமலேயே ஈராக் மக்கள் தங்கள் உரிமையைப் பெறலாம் என்று கடவுள் விரும்பினால் நாம் அவருக்கு நன்றி செய்வோம். போர் மூலமாகத்தான் உரிமையைப் பெற முடியும் என்று கடவுள் நினைத்தால் அதையும் நாங்கள்செய்வோம் என்றார் அவர்.

அமெரிக்காவின் தாக்குதலில் இருந்து தப்பிக்க ஈராக் அதிபர் சதாம ஹுசேன் வேறு நாட்டுக்குச் சென்று விட வேண்டும் என்று அவரிடம் அரபு நாடுகள் யோசனை கூறியுள்ளதாகத் தெரிகிறது.

லிபியா,எகித்து,கியூபா, வட கொரியா, மவ்ரிடானியா, பிலாரஸ் ஆகிய நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டுக்கு அவர் சென்று விடுவது நல்லது. அவரும் அவரது குடும்பமும் தப்பிக்கலாம். பொருளாதரத் தடையால் 12ஆண்டுகளாக பாதிக்கப்பட்டிருக்கும் ஈராக் மக்களும் போரின் கொடுமையிலிருந்து தப்பிக்கலாம் என்று அரபு நாடுகளின அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.(பி)

## போரைத் தவிர்க்க ஒரே வழி
# ஈராக் தனது தூய்மையை நிலை நாட்ட வேண்டும்

(வாஷிங்டன்)

ஈராக் வழங்கியுள்ள போர் ஆயுதங்கள் பற்றிய அறிக்கையில் பெரும் இடைவெளிகள் காணப் படுவதாகவும் இவைகளுக்குத் தகுந்த திருப்திகரமான விடை கிடைக்காதவிடத்து ஈராக் ஒத்துழைக்க மறுக்கின்றது ஆபிரிக்க நாடுகளில் என்றே அர்த்தம் கொள்ளப்பட வேண்டும் என அமெரிக்கா கூறியுள்ளது.

மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது படை அணிகளை பல மடங்கு அதிகரித்து வருகின்றது. ஏறத்தாழ 150,000 அமெரிக்கப்படையினர் வளைகுடாப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை ஐ.நா ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக் அதிகாரிகளிடமிருந்து மிக முக்கியமான சில கேள்விகளுக்கு விடை காண்பதற்கு இந்த வார இறுதிக்குள் அங்கு செல்லவிருப்பதாக அறியப்படுகின்றது.

ஐ.நாவின் மிக உயர் பரிசோதகர்களான ஹான்ஸ் பிளிக்ஸ், மொகமத் எல்பரடே ஆகிய இருவரும் அடுத்தவாரம் பாக்தாத் சென்று பிரஸ்தாப இடைவெளிகள் தொடர்பாக ஈராக் அதிகாரிகளிடம் கேள்விகள கேட்கவிருக்கிறார்கள்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷும் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயரும் ஈராக் தொடர்பான பல இரகசியங்களை கைவசம் வைத்திருக்கிறார்கள் என்று கருதப் படுகின்றது. ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பது பற்றிய புலனாய்வுத்தகவல்கள் இவர்களிடமிருப்பதால், ஈராக் தனது துாய்மையை வெளிப்படுதினால் தவிர யுத்தம் தவிர்க்க முடியாததாகிவிடும் என்று அவர்கள் அச்சுறுத்திவருகின்றனர்.

இதற்கிடையில் இரசாயனக் குண்டுகள் நரம்புகளைத் தாக்கும் வாயுக்கள், ஏவுகணை இயந்திர இறக்குமதி போன்ற விடயங்களை இன்னமும் ஈராக் தெளிவுபடுத்தவில்லையென்று ஐ.நா. சோதனையாளர்கள் கூறியுள்ளனர்.

1998க்குப் பிறகு ஐ.நா. ஆய்வாளர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருந்த சமயத்தில் ஈராக் பேரழிவு ஆயுத உற்பத்திக்கான பொருட்களை அழித்துவிட்டதாகக் கூறுவதை நிரூபிப்பதற்குச் சரியான ஆதாரங்களை முன் வைக்கவேண்டும் என ஐ.நா ஆய்வாளர்கள் கோரியிருக்கிறார்கள். (பி)

# பிரான்ஸ் - ஜேர்மன் நட்பின் அறிகுறி

(பாரிஸ்)

1871 ஆம் ஆண்டு நவஜேர்மனியின் பிறப்பை அறிவிப் பதற்காக வார்செயில்ஸிலுள்ள ஹால் ஒப் மிறர் மாளிகைக்கு வெற்றிவாகையுடன் சென்றார் புஸ்மார்க்.

1919 ஆம் ஆண்டு அதே இடத்தில் ஜேர்மனியின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காக நேச நாடுகளின் தலைவர்கள் கூடினார்கள்.

இம்மாதம் ஜேர்மனியின் முழுப் பாராளுமன்ற உறுப்பினர்களும் வார்செயிலுக்கு வருவார்கள். 1963 இல் கொன்றாட் அடினூருக்கும் ஜெனரல் சார்ல்ஸ் டி காலுக்குமிடையில் பிராங்கோ- ஜேர்மன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் 40 ஆவது வருட கொண்டாட்டங்கள் இங்கு நடைபெறவிருக்கின்றன. இம்மாதம் இடம்பெறும் கொண்டாட்டங்களில் ஜேர்மனியையும் பிரான்சையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இப்போதைய பிரெஞ்சு அதிபர் ஜெக்ஸ் கிராக்கும் ஜேர்மன் அதிபர் ஜெர்ஹார்ட் ஸ்ச்றொடரும் உரையாற்றுவது சிறப்பம்சமாகவிருக்கும். (பி)



கடந்த ஆண்டு டிசம்பர் 13ஆம் திகதி இந்திய நாடாளு மன்றத்தின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் நினைவுதினம் நேற்று டெல்லியில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்தியாவின் நுழைவாயிலில் உயிரிழந்தவர்களின் புகைப் படங்கள் வைக்கப் பட்டிருந்தன.

## சமஷ்டியும் சவால்களும்
## யாழ். பல்கலையில்
# இரு நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரட்ரீச் ஈபேர்ட் நிறுவனமும் மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடத்தும் சமஷ்டிமயப்படுத்தலில் சந்தர்ப்பங்களும் சவால்களும் என்ற விடயம் தொடர்பிலான இருநாள் கருத்தரங்கு இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முன்னெடுக்கப்படும் சமகால விடயங்கள் ஆழமாக ஆராயப்படவுள்ளன.

தற்கால சமாதான நடைமுறைகள் பற்றிய மதிப்பீடு, இலங்கையின் அதிகாரப் பரவலாக்கலின் வரலாறு, ஒப்பீட்டு சமஷ்டியின் போக்குகள், இலங்கையின் இன முரண்பாட்டுக்கான சமஷ்டிச் சிந்தனைகள், அதிகாரப் பகிர்வில் சமஷ்டியின் பொதுநியதி, இலங்கைக்கான அரச மீள் உருவாக்கம் தொடர்பான கருத்துக்களும் மாதிரிகளும் போன்ற விடயங்கள் முக்கிய கருப் பொருட்களாக அமையவுள்ளன.

கருத்தரங்கில் வடக்கிலும் தெற்கிலும் இருந்து பலர் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

கருத்தரங்கில் மட்டுப்படுத்தப்பட்ட காலஒதுக்கீடு காரணமாக பங்குபற்றுநர் தவிர, பார்வையாளர்களாக எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என இக் கருத்தரங்கில் கோரியுள்ளன.

இன்றைய கருத்தரங்கு காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 வரை நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு கொழும்பு ஈபேர்ட் ஸ்டிபியங் நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி கலாநிதி டிரீட்மர் கினீட்ஸ்சலின் வரவேற்புரையைத் தொடர்ந்து பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் கருத்தரங்கின் நோக்கம் பற்றி விளக்குவர்.

இதையடுத்து பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் உரை நிகழ்த்துவர்.

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ் கே. சிற்றம்பலம் தலைமையில் தற்போதைய அமைதி முயற்சிகள் பற்றிய மதிப்பீடு இடம் பெறும். யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பி. பாலசுந்தரம் பிள்ளை இதில் கருத்துரை வழங்குவார்.

யாழ். பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ் கே. பரமநாதன் தலைமையில் இலங்கையின் அதிகாரப்பரவலாக்கலின் வரலாறு பற்றிய உரையினை பேராசிரியர் எஸ். கே. சிற்றம்பலம் வழங்குவார்.

யாழ் பல்கலைக்கழகவரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சத்தியசீலன் தலைமையில் சட்டத்துறையைச் சேர்ந்த வி.ரி. தமிழ் மாறன் ஒப்பீட்டுச் சமஷ்டி முறைபற்றிய உரையை நிகழ்த்துவர்.

வி.ரி. தமிழ் மாறன் தலைமையில் இலங்கையின் இனப் பிரச்சினையும் சமஷ்டிகொள்கையும்பற்றிய ஆய்வுரையை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையைச்சேர்ந்த றோகான் எதிரிசிங்க நிகழ்த்துவார். (பி)

# பொருண்மிய உதவியுடன் மர நடுகைத் திட்டம்

(தும்பளை)

வடமராட்சி கிழக்கு வல்லிபுரக் கோவில் பகுதியில் இருந்து குடத்தனை வரையான இடங்களில் மர நடுகைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தினை வடமராட்சி கிழக்கு சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புச் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

மேற்படி திட்டத்திற்கான மரக்கன்றுகளை விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவு விநியோகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-245)

# சிறுவர்களுக்கு சிற்றுண்டிப் பொதி
## பொலிஸார் அன்பளிப்பு

(அச்சுவேலி)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு, கடந்த புதன் கிழமை, துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய முன்றலில் வைத்து, பருத்தித்துறை பொலிஸாரினால் ஐம்பதுக்கும் மேற்பட்ட, சிறுவர் மற்றும் முதியோருக்கு சிற்றுண்டி வகைகளடங்கிய உணவுப் பொதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. சி. ஹப்புஆராய்ச்சி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில், சப் இன்ஸ்பெக்டர்களான கே. ரட்ணாயக்கா, ஆர். ஹேரத், சார்ஜன்ட்கள் ஃஹேரத், கல்யாணரட்ண, டண்டார ஹாமினி ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-14)

# வல்லிபுர ஆழ்வார் ஆலய நூலகத் திறப்பு விழா

(அச்சுவேலி)

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய நூலகத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இதில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

ஏகாதசி புராண நூல் வெளியீடு, அற நெறிப் பாடசாலை ஆரம்ப விழா, திருப்பாவைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கல், பாடசாலை உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கல் ஆகியனவும் இந் நிகழ்வில் இடம் பெறவுள்ளன. (உ-14)

## புனர்வாழ்வு உபகுழு கூட்டத்தில்
# முஸ்லிம் மக்கள் மீள்குடியமர்வு
# திட்டத்தை புலிகள் சமர்ப்பிப்பர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கான அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத்தேவைகளுக்கான உபகுழுவின் அடுத்த கூட்டத்தில், வடபகுதியில்இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பான திட்டத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இக்கூட்டம் அடுத்தமாதம் 13, 14 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம்மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது ஆராய்ந்துவருகின்றனர்.

அத்துடன் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடந்து முடிந்த சிரான் மாநாட்டின் போதும் இவ்விடயம்குறித்து ஆராயப்பட்டது. (உ-8)

சுகாதாரப் பரிசோதகர்களின்

# அறிவுறுத்தல்களை வர்த்தகர்கள் அசட்டை

(துன்னாலை)

சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தல்களை உணவுக் கடை உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் கேட்டு நடப்பதில்லை என பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி கவலை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அறிவுறுத்தல்களை வழங்குவதற்கோ அல்லது திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கோ சுகாதாரப் பரிசோதகர்கள் செல்லுமிடத்து அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்புக்களை வழங்காததுடன் முரண்பட்டு வருவதாகவும்,

இதன் காரணமாக சுகாதாரப் பரிசோதகர்களிடையே அச்சம் நிலவுவதால் அவர்கள் குழுவாகச் சென்றே தமது பணிகளை முன்னெடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-41)

## மீள் நியமனம்

(தென்மராட்சி)

ஓய்வுபெற்ற தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளை இம் மாதம் 16 ஆம் திகதி முதல் யாழ். அரச செயலகத்தில் திட்டப்பணிப்பாளராக மீள் நியமனம் பெற்றுள்ளார். (உ-77)

மருத்துவ வார

## நிகழ்வுகள்
### 'ஐ' அலைவரிசையில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபன 'ஐ' அலை வரிசையில்இன்று பி.ப. 4.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்களால் நடத்தப்பட்ட மருத்துவ வார இறுதி நாள் நிகழ்வுகளின் தொகுப்பு ஒளிபரப்பாகவுள்ளது. (உ)

## அமெரிக்காவை

புக்குள்ளாகும்.

அதேபோன்று மத்திய கிழக்கு நாடுகளில் சுமார் 7 இலட்சம் இலங்கையர் தொழில் புரிகின்றனர்.

எதிர் காலத்தில்மேலும் பல தொழில் வாய்ப்புக்கள் எதிர் பார்க்கப்படுகிறன.

மத்தியகிழக்கில்யுத்தம் மூண்டால் இவை எல்லாவற்றையும் இழக்க வேண்டி நேரிடும் என்று மேலும் இவ் அமைப்புகள் தெரிவித்துள்ளன (உ)

## மானிட விடுதலை
### இறுதிப் பேச்சு

1902 ம் ஆண்டு யூலை 4 ம் திகதி இரவு சுவாமி விவேகானந்தர் மகாசமாதி அடைந்தார். அன்றைய தினமும் கூட அவர் தனது அன்பர்களிடம் பேசுகிறார்.

'இந்தியா அமரத்துவம் பெற்றது. ஆண்டவனைத் தேடுவதிலேயே ஈடுபட்டால் இந்தியா என்றென்றும் வாழும் ... ஆனால் பயனற்ற அரசியலையும் சமூகச்சச்சரவுகளையும் தேடிப் போனால் இந்தியா செத்துவிடும்'

இதுதான் சுவாமி விவேகானந்தரின் கடைசிப் பேச்சு, அதன் பிறகு சில மணி நேரத்திற்குள் சுவாமிஜி மகா சமாதி அடைந்து விடுகிறார். அவருடைய கட்டளையை நிறைவேற்றுவதில் நாம் எவ்வளவு பொறுப்போடு இயங்க வேண்டும்.

# எமது மக்களின்...

இந்தப் படைபலத்தின் மூலம் தமிழர்கள்தமது வாழ்வுரிமையைப் பெற்றே தீருவார்கள் என்ற நம்பிக்கையைச் சுமந்த ஒரு பெரு மகன் கேணல் கிட்டு. அவருடைய நம்பிக்கையின் வெளிப்பாடு தான்இன்று அவருடைய ஞாபகமாகஉருவாகியிருப்பது கேணல் கிட்டு படையணிப்பிரிவு.

கிட்டு அண்ணா என்றுமே எமது பாதுகாப்புக்கான ஒரு நம்பிக்கையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். தமிழர்களின் வாழ்வுப் பலம் நிலைக்க வேண்டுமானால், அவர்கள் கௌரவமாக, பாதுகாப்பாக, சுதந்திரமாக நிம்மதியாக இந்த மண்ணில் உரிமையுடன் வாழ வேண்டுமானால், தமிழர்களுடைய இராணுவ பலம் நிலைக்க வேண்டும். இன்னும்பெருக வேண்டும்.

### தமிழர் வாழ்வுப் பலம் வேண்டும்

தமிழர்களுடையஇராணுவ பலம் இன்னும் அதிகரிக்குமேயானால் தமிழர்களுடைய வாழ்வுப் பலம்அதிகரிக்கும். அவர்கள் சுதந்திரமாக இருக்கக் கூடிய ஒரு சூழ் நிலை பிறக்கும். எமது மக்களுடைய வாழ்வு ஒளிமயமாகும என்ற உணர்வோடு தோடும் உறுதியோடும் உழைத்த கிட்டண்ணாவின் கற்பனை நிறைவேறும் காலம் என்பது நிச்சயம் உறுதியாகிக் கொண்டிருக்கிறது.

நாம் அடிமையாகவும் மாட்டோம். யாருக்கும் அடிபணியவும்மாட்டோம். இன்றைய சூழ்நிலையை எடுத்துப்பார்க்கின்றபோது இதைத்தெளிவாகப் பார்க்க முடியும். மக்களுடைய வாழ்வுரிமைப் போராட்டம் உச்சப்பட்டுக் கொண்டிருக்கிறது. எமது போராட்டத்துக்கு எத்தனையோ நெருக்கடிகள்: அழுத்தங்கள் தடைகள் வந்தன. அத்தனையையும் தாண்டி இந்தப் போராட்டம் இன்னும் வீறுநடை போட்டு வலுவுடன் முன்னெடுக்கப் படுகிறது.

இன்று என்னைச் சந்தித்த சில சிங்கள சகோதரர்கள், நீங்கள் இன்னும் விட்டுக் கொடுத்து நடந்தால் என்ன? என்று கேட்டார்கள்.' விடுதலைப்புலிகளின் வரலாற்றைப் பார்க்கின்றபோது எப்போதுமே விட்டுக்கொடுத்துத்தான் வந்துள்ளார்கள்.

எமது மக்களின் வாழ்வுரிமையை மட்டும் நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம். எமது மக்களின் கௌரவமான, பாதுகாப்பான, சுதந்திரமான வாழ்க்கையை இழக்கமுடியாது. அனுமதிக்கவும் மாட்டோம். விடுதலை தான் எமது வாழ்வு. அதைத் தான் நாம் எல்லோரும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

விட்டுக் கொடுக்க வேண்டியது அரசு எமது மக்களின்வீடுகளிலே இராணுவம் இப்போதும் நிலை கொண்டிருக்கிறது. பாடசாலைகள், ஆலயங்கள் அரச பொதுக் கட்டடங்களிலும் கூட இராணுவம் நிலை கொண்டுள்ளது உடன்படிக்கையின்படி இவற்றில் இருந்து 160 நாட்களில் இராணுவம் வெளியேற வேண்டும். ஆனால் வெளியேறவில்லை. ஆனாலும் நாம் விட்டுக் கொடுத்துத்தான் இருக்கிறோம்.

### விட்டுக்கொடுப்பு

விட்டுக்கொடுத்தால் மாற்றம் ஏற்படும். நம்பிக்கை ஏற்படவேண்டுமாயின், சந்தேகங்கள் நீக்கப்படல்வேண்டும் சந்தேகங்கள் நீக்கப்பட வேண்டுமாயின்மக்களின்வாழ்வுக்கு மதிப்பளிக்கவேண்டும்.

அதைவிடுத்து மக்களின் வாழ்வில் எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தாது இராணுவ நெருக்குவாரங்களுக்கு மத்தியிலே மக்களை வைத்துக்கொண்டு இன்றும் இராணுவ பாதுகாப்பு என்ற போர்வையிலும் தந்திரோபாயம்என்ற போர்வையிலும் இராணுவ நிலைகளை அப்படியே வைத்துக்கொண்டு இருப்பீர்களேயானால் மாற்றம் எவ்வாறு உருவாகும்?

மாற்றம் உருவாகவேண்டுமானால் அடிப்படையிலே இந்த மக்களின்வாழ்விலே மாற்றம்வேண்டும். அதைப் புரிந்துணர்வு உடன்படிக்கை வலியுறுத்தி நிற்கிறது. நாம் எமது இராணுவபலத்தை இழக்கமுடியாது. இழப்போமானால் எமதுமக்களின் வாழ்வுரிமையை இழந்துவிடுவோம். இதிலே எமது தலைவரும் மக்களும் கவனமாக இருக்கிறார்கள். மக்களும் இதில் கவனமாகவும் மிகத் தெளிவாகவும் இருக்கவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கூட்டுறவுச் சமாசத்தலைவரும் தமிழ்காங்கிரஸ்கட்சியின் மாவட்ட இணைப்பாளருமான சீ. வீ. கே. சிவஞானம் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்துறை விரிவுரையாளர் ம. சிதம்பரநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (உ-77)

## விரிவுரைகள் 27 இல் ஆரம்பம்

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2003 ஆம் ஆண்டிற்குரிய சகல பாடநெறிகளுக்குமான விரிவுரைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் எனவும், புதிய மாணவர்களுக்கான பதிவுகள் யாவும் அறிவிக்கப்பட்ட திகதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# மானிட விடுதலை நோக்கிய ஆன்மீகப்பயணத்தில்

# வெற்றிவாகை சூடியவர் சுவாமி விவேகானந்தர்

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமய சமரசத்திற்கு ஆலய தீபஸ்தம்பமாக கலங்கரை விளக்கமாகப் பேரொளி விட்டுப் பிரகாசிக்கிறார். வள்ளலாரோ, ஸ்ரீ ராமகிருஷ்ணரோ தாங்கள் பிறந்த மதத்தை விட்டு விடவும் இல்லை, புறக்கணிக்கவும் இல்லை.

### பிறந்த மதம்

'எம்மதமும் சம்மதம், என்பதைப் பின்பற்ற வேண்டிய அதே நேரத்தில் மக்கள் அவரவர் பிறந்த மதம் கூறும் ஆன் மீகத்தில் காலூன்றி இருக்க வேண்டுமே தவிர, தாங்கள் பிறந்த மதத்தைக் கைவிட்டோ அல்லது தமக்கென்று ஒரு மதமும் இல்லாமலோ இருக்கக் கூடாது.

தமக்கென்று ஒரு மதமும் வைத்துக்கொள்ளாமல் எல்லா மதங்களும் பொது என்று சொல்வது அவ்வளவு விவேகமாகத் தெரிவதில்லை என விவேகானந்தரே சொல்வார்.

மகாகவி பாரதியார் தமிழ் நாட்டின் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். ஆனால் அதே நேரத்தில் அவர் இந்தியா முழுவதையும் நேசித்தார். தமிழ் நாட்டின் மீது அவருக்கு இருந்த அன்பு இந்தியா முழுவதையும் அவர் நேசிப்பதற்குத் தடையாக அமையவில்லை.

அதுபோல் அவரவர் பிறந்த மதத்தை மதிக்கும் அதே நேரத்தில் பிற மதங்களையும் மதிப்பது சாத்தியமே. சமய சமரசம் பற்றிய கருத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கம் சமுதாயத்துக்கு போதித்துக் கொண்டிருக்கிறது.

### மறுமலர்ச்சி

அது போன்று மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களும் சமய சமரசம் பற்றிய கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். மக்களிடையே பிரசாரம் செய்யவேண்டும்.

ஏன் வரலாற்றைக் கூர்ந்து கவனித்தால் சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுக்குப் பிறகுதான் இந்தியாவின் அரசியல், கல்வி, பெண்கள் முன்னேற்றம், தொழில்வளர்ச்சி, கலை, மொழி, இலக்கியம் போன்ற எல்லாத்துறைகளிலும் ஒரு

சுவாமி விவேகானந்தரின் தேசபக்திக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட எண்ணற்றவர்களில் மகாத்மா காந்திஜியும் ஒருவர்.

''விவேகானந்தரின் எல்லா நூல்களையும் நான் முழுவதும் படித்திருக்கிறேன். அவற்றைப் படித்த பிறகு எனக்கு என் தாய் நாட்டின் மீதிருந்த அன்பு ஆயிரம் மடங்கு அதிகமாயிற்று...'' என்று காந்தியடிகள் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவுக்கு வேதாந்தத்தால் புத்துயிர் வழங்கிய ஞான சூரியன் விவேகானந்தராவார். இலட்சம் பேர் சிறை சென்று எழுப்பும் தேசபக்தியை விவேகானந்தரின் ஒருபேச்சு எழுப்பிவிடும் என்றார் திரு. வி. க.

'துறவாடையில் திகழ்ந்த புரட்சிவேள்' என்று விவே

**மதுரகவி காரை**

**எம். வி. அருளானந்தன்**

மறுமலர்ச்சி ஏற்பட்டது என்பது தெரியவரும்.

விவேகானந்தருடைய சிந்தனைகளின் தாக்கம் தேசிய விழிப்பை, தேசியமறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. இந்திய விடுதலைப்போரில் தமிழ் நாட்டில் பாரதி வ. உ. சி. சுப்பிரமணிய சிவா. ஆகிய மூவரும் திரிசூலம்போன்று விளங்கினார்கள். இந்த மூவருமே விவேகானந்தரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர்கள்.

### விடுதலை வேட்கை

இயேசுபிரான் கல்லறையிலிருந்து உயிர்பெற்று எழுந்ததைப்போல் விவேகானந்தரால் இந்துமதம் எழுச்சி பெற்றது அவர் இல்லாமல் இருந்திருந்தால் நாம் விடுதலை பெற்றிருக்க மாட்டோம். என்று ராஜாஜி கூறினார்.

மகாகவி பாரதியார் விவேகானந்தரைப் பற்றி குறிப்பிடுகின்ற பொழுது விவேகானந்த பரமஹம்ச மூர்த்தியே இந்திய சுயாதீனக் கிளர்ச்சிக்கு அத்திபாரம் போட்டவர் என்பதை உலகம் அறியும் எனக் குறிப்பிடுகின்றார்.

கானந்தரைப் பற்றிக் குறிப்பிட்டார். பொதுவுடைமைக்காரரான ப. ஜீவானந்தம், அவர் இளம் வயதில் முதல் முதலாக எழுதிய கட்டுரையும், வாழ் நாளில் கடைசியாக எழுதிய கட்டுரையும் சுவாமி விவேகானந்தரைப் பற்றியதாகவே அமைந்தன.

என் தலைமுறையில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பலர் அதற்கு வேண்டிய ஆற்றலை சுவாமி விவேகானந்தரின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் படித்தே பெற்றார்கள் என்று பண்டித ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

'விவேகானந்தர் உயிருடன் இருந்திருந்தால் நான் எப்போதும் அவர் காலடியில் அமர்ந்திருக்கவே விரும்புவேன். உண்மையைச் சொல்வதானால் இன்றைய இந்தியா விவேகானந்தருடைய படைப்பே ஆகும்' என்று நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் கூறினார். இவ்வாறாக ஆன்மீகவாதியான விவேகானந்தர் தேசபக்திக் கருத்துக்களால் பல தலைவர்களைக் கவர்ந்து வாழ்ந்திருக்கின்றார்.

(5ம் பக்கம் பார்க்க)

## ஏற்புத் தடை ஊசி மருந்துக்குத் தட்டுப்பாடு

(சுதுமலை)

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்திய சாலையிலும் மானிப்பாய் மத்திய மருந்தகங்களிலும் கடந்த மூன்று மாதங்களிற்கு மேலாக ஏற்புத் தடை ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் அன்றாடம் தொழில் செய்து வரும் கிராமிய ஏழைத் தொழிலாளர்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சிறிய காயங்களிற்கு கூட ஏற்புத்தடை ஊசி பெறுவதற்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டி உள்ளது.

கிராமிய வைத்தியசாலைகளிற்கு குளிரூட்டி வசதிகளும் வழங்கப்பட்ட போதிலும் தடுப்பூசி மருந்துகள் அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-252)

## கண்காணிப்புக் குழுவினர் வலம்புரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதிக்குரிய கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் இருவர் நேற்று வலம்புரி அலுவலகத்துக்கு விஜயம் செய்தனர்.

ஸ்ரீலங்கா கண்காணிப்புக் குழுவின் யாழ்ப்பாணப் பிரிவைச் சேர்ந்த அன்னி செண்டர், ருலாரீத் சொலா ஆகிய இருவருமே வலம்புரிக்கு விஜயம் செய்து கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்தனர். (பி)

## பொதுக் கூட்டம் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப்பேரவையின் பொதுக் கூட்ட அறிவித்தல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-3)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(சுதுமலை)

கொக்குவில் கிழக்குவளர்மதி சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து விக்ரம், ராஜன், கங்கு நினைவாக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சுற்றுப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி யாழ் பல்கலைக்கழக அணி, யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிகள் இதில் மோத உள்ளன.

நாளை காலை நடைபெறும் முதல் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (உ-252)

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி.

**பரிசில்கள்**

1 ஆம் பரிசு ரூபா 500
2 ஆம் பரிசு ரூபா 250
3 ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ அமரர் ச. அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி) அவர்கள் ஞாபகார்த்தமாக இப் பரிசில்கள் வழங்கப்படும்.

**போட்டியின் விதிகள்:**

★ ஆறாந்தரத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப் போட்டியில் பங்கு பற்றலாம்.

★ கட்டுரையின் தலைப்பு
''எமது கிராமம்''

★ கட்டுரை 100 தொடக்கம் 125 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.

★ புல்ஸ்காப்தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.

★ கட்டுரைகள் 25-01-2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின் வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-1**

மாணவர் முழுப் பெயர் ——————————
——————————
பாடசாலை ——————————
——————————
கற்கும் தரம் ——————
உறுதிப்படுத்துகிறேன் ——————————
வகுப்பாசிரியர்

## அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் தொடர்மழை பல்லாயிரம்பேர் பாதிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் பெய்துவரும் மழைகாரணமாக ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் நீரில் மூழ்கியுள்ளதோடு பல்லாயிரக்கணக்கானமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, மளிகைக்காடு, கல்முனை, பாண்டிருப்பு சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, ஒலுவில், பாலைமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோயில், மாவடிப்பள்ளி சம்மாந்துறை போன்ற பிரதேசசபைகளே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த டிசம்பர் மாதம் பெய்த கடும்மழைகாரணமாகவும் இப்பிரதேசமக்கள் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# சமாதான விளக்க செயற்றிட்டம் நேற்று ஆரம்பமானது

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்துமக்களுக்கு விளக்கும் நடவடிக்கையை ஐக்கியதேசியக் கட்சி நேற்று ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய மாவட்ட மட்டத்தில், கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் ஊடாக செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அங்கத்தவர்கள் உள்ளூராட்சிசபைபிரதிநிதிகள் ஆகியோர் அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கை பொருளாதார திட்டங்கள், தற்போதைய அரசியல் நிலைமை என்பவை தொடர்பாகமக்களுக்கு விளக்கமளித்து வருகின்றனர். (உ-8)

# அகத்தினை நெகிழ வைத்த அழைப்பினை ஏற்று முதுமை பாராது நானும் லண்டன் சென்றேன்

## அக்கரைச் சீமையின் அனுபவங்கள் 8

''ஒரு சிலருக்கு அவன் ஒரு பேய், மானிடநாகரிகத்தின் பரம விரோதி,குழப்பத்திற்கெல்லாம் அரசன்,வேறு சிலருக்கு அவன்ஒரு தீர்க்கதரிசி,மானிடசமுதாயத்தைப் பிரகாசமுள்ள எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்லும் அன்பு நிறைந்த தலைவன்...ஒரு பகுதி அவனைச் சபிக்கிறது. மற்றொரு பகுதி அவனை ஜபிக்கிறது.''

அவன் யார்?

''தான் என்பதை மறந்து வாழ்ந்த போதிலும்' அகம்பாவம் பிடித்தவனென்று ஆயுள் முழுவதும் தூஷிக்கப் பட்டவன்' 'தலைமைப் பதவிக்கு எப்பொழுதும் ஆசைப்படாத போதிலும் எந்தக்கூட்டத்திலும் தான் இட்டதே சட்டமாக்கியவன் "உழைப்பில்லாமல் ஊதியம் பெறுவோரைக் கண்டு இறுகுவது 'மாகியமனம் படைத்தவன்...''

அவனே கார்ல் மாக்ஸ்(*1818-1883*)

### புதிய உலகம் கண்டேன்

'கார்ல் மாக்ஸ்'வரலாற்று நூலின் ஆசிரியர் வெ.சாமிநாதசர்மா. கம்பீரம்,கவர்ச்சி நிறைந்த சித்திரிப்பு, வனப்பு நிறைந்த சொல்லாட்சி,உயிர்த்துடிப்போடு கூடிய உரைநடை, கடினமான கருத்தையும் தெளிவுடன் விளக்கிடும் உத்தி என்பனவெல்லாம் ஒன்று கூடிய அவரின் ஆற்றல்களுக்கு அடிமையாகி அக்காலத்தில் 'கார்ல் மாக்ஸ்' நூலைப்பல தடவைகள் படித்தேன். சிறுகதைகள்,நாவல்கள், அற்புதக் கதைகள்,இதிகாச புராணக்கதைகள் ஆகியவற்றுக்கே ஆட்பட்டிருந்த எனக்கு, வெ.சாமிநாதசர்மாவின் நூல் கள்(சோவியத் ருஷ்யா, ரூஸோவின்'சமுதாய ஒப்பந் தம்',சன்யாட்சென்னின் இனி செய்ய வேண்டுவது யாது?, கிரேக்க நாட்டு வரலாறு) புதிய உலகம் ஒன்றினையே என்முன்பு திறந்து விட்டன.

கார்ஸ் மாக்ஸ் பிறவிப் போராளி. மகத்தான சிந்தனையாளன் அவனுடைய நெருங்கிய நண்பன் பிரடரிக் ஏங்கல்ஸ்சொல்லியாங்கு,''மனிதன் எப்படி வளர்ச்சியடைந்தான் என்பதை டார்வின் கண்டுபிடித்தான். மானிடஜாதியின் சரித்திரம் எப்படி எப்படிப் படிப்படியாக வளர்ந்தது என்பதை மார்க்ஸ் கண்டு பிடித்தான். (வெ.சா.,கார்ல் மார்க்ஸ் 152)தனது உயிரையும் உடலையும் உருக்கி புடஞ்செய்து கார்ல்மார்ஸ் உருவாக்கிய 'மூலதனம்' என்ற நூல், பொதுவுடமைத் தத்துவத்தினை உலகினுக்கு வழங்கியது. அவனும் ஏங்கஸ்சும்தயாரித்த 'பொதுவுடமை அறிக்கை' தொழிலாளி வர்க்கத்தினை கிளர்ந்தெழுவைத்தது இவற்றினால் தூண்டப்பெற்று ருஷ்யாவிலும் சீனாவிலும் நடைபெற்ற புரட்சிப்போராட்டங்கள் அந்த நாடுகளின் அத்திபாரத்தையே புரட்டிப் புதியன வாய்ச்சமைத்தன. மாக்ஸின் கல்லறையிலே பொறிக்கப் பட்டுள்ளபின்வரும் வாக்கியங்கள் இவ்விடத்தில் சிந்திப்பதற்கு உரியன.

''தத்துவவியலாளர் பல வழிகளிலும் உலகினைப் பல்வேறு வழிகளிலே மொழிபெயர்த்து (விளக்கி)க் காட்டுவதற்கு மட்டுமே முனைந்தனர். அ்.தெவ்வாறாயினும் அதனை மாற்றியமைப்பதே நோக்கமாகும். இந்த அக்கினிப் பரீட்சையில் மாக்ஸின் இழப்புக்கள் கொஞ்சமல்ல.கொடியவறுமை, தீர்க்க முடியாதகடன் தொல்லை, மாக்ஸிற்காக்வே வாழ்ந்த அவனுடைய காதல் மனைவி ஜென்னியும் அன்புக் குழந்தைகளும் ஏன் அவனுங் கூடஅனுபவித்த கொடு நோய்கள்,மகன் ஒருவனதும் மகளதும் மரணங்கள், அவனது தீவிர முற்போக்குக் கொள்கைகளைச் சீரணிக்க முடியாத அரசுகளால் அவன் நாடு கடத்தப்படல், உட்பகை புறப்பகைகளால் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தல் என்று அவன் எரிக்கப்பட்ட மெழுகுவர்த்தியாகத் தேய்தது ஒரு சோககாவியம்.

''என்றும் நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்'' என்ற ஔவை வாக்கு நான் லண்டனில் தங்கியிருந்தகாலத்தில் கார்ல்மார்க்ஸின் கல்லறையைக் (**Grave**) கண்டதன் மூலம் நிதர்சன உண்மையான அது ஒரு மறக்கமுடியாத அநுபவம்.

### பத்மநாபஐயரின் ஏற்பாடு

பத்மநாபஐயரின் இலக்கியத் தொடர்பு மிகநீண்டது தமிழ் இலக்கியத்தைப் புது வழி நடாத்தும் வேட்கையுடன் பணி புரியும் இலக்கிய வாதிகளுக்கு ஆபத்பாந்தவராய் முன்னின்று தமது பேர் புகழைக் கருதாது உறுதுணை புரியும் மெழுகுவர்த்தி அவர்.

நான் லண்டனில் இருந்த காலத்தில் அடிக்கடி என்னை நான் இருந்த இல்லம் வந்து சந்திப்பதும், வராத காலங்களில் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்வதும் ஐயரின் வழக்கம். அவர் செய்த ஒழுங்கின் பிரகாரமே அவர், அவரின் நண்பர்கள் மு.புஷ்பராஜன், சாந்தன் ஆகியோருடன் ஆர்ச்வேயில் ஹைகேற்(**High gate**) என்ற இடத்திலுள் சேமக் காலைக்குச் சென்று கார்ல்மார்க்ஸின் கல்லறையைத் தரிசித்தேன். ஐயரின் ஏற்பாட்டிலேயே பிரித்தானிய அரும்பொருளகம்(**British Museum**) பிரித்தானிய நூலகம்(**The British Library**), ஸேக்ஸ்பியரின் பிறப்பிடம் **British Place of Shakespear**)ஆகியவற்றைச் சென்று காணும் பேறும் கிட்டிற்று. அவர் ஒழுங்குபடுத்திய எழுத்தாளர் சந்திப்பும் குறிப்பிடத்தக்கதே.

ஐயர் தமது காரிலே வந்து என்னை அழைத்துக் கொண்டு சாந்தனின் இல்லம் சென்றார். அங்கிருந்து சாந்தனின் காரிலேறி வழியிலே புஷ்பராசாவையும் கூட்டிக் கொண்டு கார்ல் மார்க்ஸின் கல்லறை நோக்கிச் சென்றோம்.

### கார்ப்பயண சுகம்


நாங்கள் சென்ற நேரம் காலை7 மணி. உயர்ந்த தருக்கள் இடை போல நிழல் தந்து காலைக் கதிரவனைக் கையசைத்து வரவேற்ற அந்த வேளையில் கார்ப்பயணம் சுகம் தந்ததைச் சொல்லவா வேண்டும். அதுவும் இலக்கிய வேட்கையும், உரையாடும் திறமும் வாய்ந்த நண்பர்களோடு பலதும் பத்தும் பேசிக் கொண்டு சென்றதை இப்பொழுது நினைக்கையிலும் மகிழ்ச்சி குதிபோடுகிறது.

மிக்குயர்ந்த மதிலும், பாரிய கேற்களும் கொண்ட ஹைகேற் சேமக்காலை நாங்கள் சென்ற வேளையில் அதனுள்ளே மீளா உறக்கத்தில் ஆழ்ந்தவர்களின் அமைதிக்கு எந்த அளவிலும் குறையாத அமைதியிலே ஆழ்ந்திருந்தது.

வாயிற் கேற்கள் பூட்டப் பட்டிருந்தன. நாங்கள் சென்ற நாளோ ஞாயிற்றுக்கிழமை. விடு முறை நாள் எனவே இன்று மார்க்ஸின் கல்லறையைப் பார்க்க முடியாதோ என்ற ஏக்கமும் ஏமாற்றமும் ஏற்பட்டன.

ஆனால் எங்களின் அந்நேர உணர்ச்சிகள் ஓர் இரு நிமிடங்களே நீடித்தன. சேமக்காலையின் எதிர்ப் புறத்தேயிருந்த கட்டடத்திலிருந்து மூதாட்டி ஒருவர் வந்து எங்களுக்குக் காலை வந்தனம் கூறினார் .தொடர்ந்து கேற்களையும் திறந்து விட்டார். மார்க்ஸின் கல்லறை தொடர்பான துண்டுப்பிரசுரங்களை வழங்கியதோடு அவனுடைய வாழ்க்கைச் சுருக்கம் அமைந்த சிறுகை நூல் ஒன்றினையும் விலைக்குத் தந்தார்.

பேராதனைப் பூந்தோட் டத்தின் முன்புற வீதியை நினை வூட்டும் பளிங்கணைய தார் வீதி எம்மை மார்க்ஸின் கல்லறையை நோக்கி இட்டுச் சென்றது.




கார்ல் மார்க்ஸின் கல்லறைக்கு முன் எழுத்தாளர் மு.புஷ்பராஜன், கட்டுரை ஆசிரியர், நாடக புகைப்படக் கலைஞர் சாந்தன்.

### கல்லறைக் காட்சி

கல்லறையை அடைந்தோம். நாங்கள் தாம் அன்றைய முதல் வருகையாளர் என்று முடிவு கட்டிய எங்களுக்கு மார்க்ஸின் கல்லறையின் கீழ் வைக்கப்பட்டிருந்த மலர்கள் எங்கள் முடிவை மாற்றி விட்டன.

மார்க்ஸ் மரணித்து ஒரு நூற்றாண்டும் இருபது ஆண்டுகளும் கழிந்து விட்டன. ஆனால் அவன் நினைவுகளும் மதிப்பீடும் எல்லோரையும் ஒரு மூலையில் யாரோ ஒரு சிலரால் மறக்காது நினைவு கூரப்படுகின்றன என்பதற்கு இந்த மலர்களும் நிதர்சன சாட்சிகள்!



கார்ல்மார்க்ஸின் சிலை

கல்லறைப் பீடத்தின் மீது அமைக்கப்பட்டிருந்த மார்க்ஸின் தலைச்சிலை எங்கள் கவனத்தை எல்லாம் ஒரு கணத்தில் தம்முள் ஈர்த்துக் கொண்டது.அறுபத்தைந்து வயதான ஒருவனின் கிழட்டுருவமாக அது தோன்றவில்லை. அடர்த்தியான தலைமயிரும், கரடித்தாடியும் வட்ட முகமும், குத்தியிழுக்கும் விழிகளும், கூரியநாசியும் கூடி அழகமைந்த நடுத்தரவயதினன் ஒருவனையே காண்பது போன்ற பிரமையை அந்தத் தலைச்சிலை என்னுள் ஏற்படுத்தியது.

''இவனைப்போல் விகாரமுள்ள ஒரு மனித உருவம் சூரிய வெளிச்சம் படுகிற இந்தப் பூலோகத்தில் இருக்க முடியுமா என்று(மார்க்ஸின் ஊர்வாசிகள்) கேட்பார்கள்'' என்ற வெ.சாமிநாதசர்மாவின் கூற்று (கார்ல் மார்க்ஸ் பக்.22) அந்த வேளையில் நினை வுக்கு வந்த போது என் உள்ளத்திலே பெருவியப்பு ஏற்பட்டதில் தவறில்லை. ஏனெனில் அவ்வளவு அழகை அவனது தலைச் சிலையில் அவ்வேளையில் நான்

**சொக்கன்**

கண்டு ரசித்தேன்.

எங்களுடன் வந்த சாந்தன் திறமை வாய்ந்த நிழற்படக்கலைஞர்.(பாலேந்திராவின் அவைக் காற்றுக் கலைக்கழகத்தில் உறுப்பினராயும் நடிகராயும் உள்ளார்) என்னைத் தனித்தும் ,நண்பர்களோடும் சேர்த்து படங்கள் எடுத்தார்.(அவர் எடுத்த படங்களின் சிறப்பை மனங் கொண்ட மெல்லுள்ளமும் இரசிக உணர்வும் மிக்க பத்மநாபஐயர் அவை தமது கைகளுக்குக் கிடைத்ததும் தபாற் பொதியிலும் அனுப்பாது (கசங்கி விடுமோ என்ற அச்சத்தால்) நேரில் காரில் வந்து என்வீட்டில் கையளித்துச் சென்றார்.

நாங்கள் மார்க்ஸின் கல்லறையிலிருந்து வெளிப்போந்த போது சாமிநாதசர்மாவின் கார்ல்மார்க்ஸின் நூலின் இறுதிப்பந்தி வாசகங்களே என் நினைவில் நின்று நெஞ்சை நிறைத்தன.

''மார்க்ஸ் யூதனாகப் பிறந்தான், கிறிஸ்தவனாக வாழ்ந்தான். மனிதனாக மரித்தான் அவன் பெயர் ஊழிக்காலம்வரையில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்'' வளரும்.

## இறைமாட்சி வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கென அமைக்கப் பட்டுள்ள புதிய கட்டடத் தொகுதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 'இறைமாட்சி' வைபவம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கல்வியியற் கல்லூரிக்கென அமைக்கப் பட்டுள்ள புதிய கட்டடத்தொகுதி திறப்பு விழா விரைவில் இடம் பெறவுள்ளது. (த)

## விரிவுரைகள் இன்றுஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

அன்றைய தினம் விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவரையும் காலை 8.00மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு வருகை தருமாறு கேட்கப் பட்டுள்ளது. (த)

## விலை உயர்வை ஆராயக் குழு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வை ஆராயும் பொருட்டு அரசு விசேட குழுவொன்றை நியமித்துள்ளது.

சிரேஷ்ட நிர்வாகத்துறை அதிகாரி கே.எஸ்.ஜே விஜயதாஸ தலைமையில், அமைச்சர்களான சொக்ஸி, கருஜெயசூரிய, பந்துல குணவர்த்தன ஆகியோர் இக்குழுவில் அங்கம் பெறுகின்றனர். (உ-8)

## நாட்டில் நால்வகைக் காய்ச்சல்

(கொழும்பு)

மூளைக்காய்ச்சல்,டெங்குக் காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல், வைரஸ் காய்ச்சல் போன்றவை நாட்டின் பல பகுதிகளிலும் தீவிரமாகப் பரவிவருவதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பற்றீரியா,மற்றும் மூன்று வித வைரஸ்களால் இக்காய்ச்சல்கள் பரவுகின்றன.

மூளைக்காய்ச்சல்,டெங்குக்காய்ச்சல் நுளம்புகளால் பரப்பப்படுகின்றன. இதனால் சுற்றாடலை சுத்தமாகவும், உலர்ந்த நிலையிலும் வைத்திருக்க வேண்டும்.

மூளைக்காய்ச்சல் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகம் பரவிக் காணப்படுகின்றது.வைரஸ் காய்ச்சல் யாழ்ப்பாணம், வன்னி நிலப்பரப்பிலும் பரவியுள்ளது என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (உ-3)

## 19 மாணவர்கள் விடுதலை

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலை மாணவன் படுகொலை தொடர்பாக கைது. செய்யப்பட்ட மாணவர்களில் 19பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப் பட்டனர்.

கங்கொடவெல நீதிமன்றத்தில் இச்சம்பவத்தடன் தொடர்புடைய 50 மாணவர்களையும் ஆஜர் செய்த போது மேற்படி 19 மாணவர்களையும் விடுதலை செய்யுமாறு நீதிவான் பிரதீப ஹெட்டியாராய்ச்சி உத்தரவிட்டுள்ளார்.ஏனைய 31 மாணவர்களையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 31 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (உ-8)

## மேலதிக அரச அதிபராக பத்தினியம்மா

(யாழ்ப்பாணம்)

தற்போதைய யாழ் மாவட்ட மேலதிக அரசஅதிபராக கடமையாற்றும் து.வைத்திலிங்கம் அடுத்த வாரம் ஓய்வு பெறுவதையடுத்து, அவரின் இடத்திற்கு திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் நியமிக்கப்பட வுள்ளார். (உ-3)

# எமது மக்களின் வாழ்வுரிமையை விட்டுக் கொடுக்க நாம் தயாரில்லை

## தளபதி கிட்டு நினைவு நிகழ்வில் இளம்பரிதி உரை

(தென்மராட்சி)

தமிழ் மக்களின் மனங்களிலே நிம்மதி ஏற்படுகின்ற போது தான் இந்தச் சமாதானம் நிரந்தரமாகும். மக்களின் மனங்களிலே நம்பிக்கை ஏற்படுகின்ற போதுதான் இந்த மக்கள் இன்னும் சமாதானத்தில் பற்றுணர்வுடன் இருப்பார்கள். மக்களின் மனதில் நம்பிக்கை ஏற்படாத போது, நிம்மதி ஏற்படாத போது சமாதானம் நிரந்தரமாகாது. எனவே மக்களின் வாழ்வில் இயல்பு நிலையைத் தோற்றுவியுங்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியல் நேற்று முன்தினம் நடைபெற்ற மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் பத்தாண்டு நினைவு நாளில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் க.றுகுணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மூத்ததளபதி கேணல் உட்பட மற்றும் ஒன்பது வீரவேங்கைகளின் திருவுருவப்படங்களுக்கான பொதுச் சுடரை வலிகாமம் வலய மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் வசந்தி ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வையொட்டி நல்லூர் ஆலயச்சுற்றாடல் எங்கும் சிவப்பு ,மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இளம்பரிதி அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

### தளபதி கிட்டு விடுதலை மூச்சு

மூத்ததளபதி கேணல் கிட்டு ஒரு விடுதலை மூச்சு. வாழ்வுக்கான ஒரு வழிகாட்டி. எமது இனத்தினதும் எமது தேசத்தினதும் பாதுகாப்புக்கான ஒரு கவசம். எமது தலைவர் குறிப்பிடுவது போல, கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். எதிரி எமது பிரதேசத்தை ஆக்கிரமிக்க முனைந்த போது அந்நேரத்தில் எமது போராளிகள் வாயில் வருகின்ற சொல் 'கிட்டுஅண்ணா' தான்.



சுடுகல ஆயுதங்களுடன் போராட்டத்தை ஆரம்பித்து பெரும் படையணியாக எமது தமிழருடைய படை பலம் பெருகும்.

(5ஆம்பக்கம் பார்க்க்)

## இன்று ஒரு தகவல்

# எதற்கு மரியாதை!

அந்தக் காலத்தில் அஹிம்சைக்கு மரியாதை அதிகமாக இருந்தது மாதிரியும், இந்தக் காலத்தில் ஹிமசைகு அதிக மரியாதை இருக்கிறது மாதிரியும் தெரிகிறது. ஒரு பெரியவர் உண்மையைப் பற்றி, சத்தியத்தைப் பற்றி நிறைய உபதேசம் பண்ணினார். அதன் படியே நடந்தார். அவர் பின்னால் நிறையக் கூட்டம் இருந்தது. சீடர்கள் அதிகமாக இருந்தார்கள். அவரின் கொள்கைக்கு மரியாதை இருந்தது. ஆனால் காலப் போக்கில் அந்த மரியாதை குறைந்து போயிற்று. அவர் பின்னால் போன கும்பலும் குறைந்து போயிற்று. இது ஏன்? இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார் ஒருவர். அதற்குப் பதில் சொல்ல வந்தார் இன்னொருவர். அவர் ஒரு கதையைச் சொன்னார். சீக்கியக் குட்டிக்கதை.

மகான் குருநானக் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்த காலம், அவர் பின்னால் ஏகப்பட்ட கூட்டம், போகிற இடமெல்லாம் மக்கள் வெள்ளம் அவர் எந்த ஊருக்குப் போனாலும் எல்லாரும் பின்னால் போனார்கள். இந்தக் கூட்டத்தையும், அவர்களிடம் இருக்கின்ற ஆர்வத்தையும் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டுப் போனார் ஒருவர். அவர் குருநானக்கினுடைய நண்பர். அவர் நேராகப் போய்க் குருநானக்கைப் பார்த்தார். ``ஆகா! உங்களுக்குத்தான் எத்தனை ஆயிரம் சீடர்கள்'' என்றார். குருநானக் இதைக் `கேட்டுவிட்டு இலேசாகச் சிரித்தார். அவ்வளவு தான். பதில் எதுவும் சொல்லவில்லை.

கொஞ்ச நாள் கழித்து குருநானக் ஊரைவிட்டு இன்னொரு ஊருக்குப் புறப்பட்டார். ஆயிரக் கணக்கானவர்கள் பின்னால் போனார்கள். சும்மா போகவில்ல. ``குருமகராஜ் கி ஜே'' என்று கோஷம் போட்டுக் கொண்டே போனார்கள். ஒரு சாலை ஓரமாகப் போய்க் கொண்டே இருக்கிறார்கள். திடீரென்று ஒரு இடத்திலே, ஆகாயத்திலிருந்து செப்புக் காசுகள் மழை மாதிரிக் கொட்டியது! கோஷம் போட்டுக் கொண்டு வந்தவர்களில் பாதிப்பேர் உடனே கலைந்து ஓடினார்கள், அவரவர்களுக்குக் கிடைத்த செப்புக் காசுகளையெல்லாம் பொறுக்கி மடியிலே கட்டிக் கொண்டார்கள. குருநானக்கிடம் சொல்லிக் கொள்ளாமலே நழுவிப் போய் விட்டார்கள்.

அவர் இவைகளைக் கவனிக்காமலே தொடர்ந்து போய்க் கொண்டேயிருந்தார். அடுத்த ஊருக்குப் போனார். அங்கே மறுபடியும் ஒரு பணமழை. போன தடவை செப்புக் காசல்லவா கொட்டியது. இந்தத் தடவை வெள்ளிக் காசாகக் கொட்டிற்று இப்போதும் இருந்த கூட்டத்தில் பாதிப்பேர் கலைந்து ஓடினார் கள். முடிந்த அளவுக்கு வெள்ளிக்காசை அள்ளி எடுத்துக் கொண்டார்கள்! நல்ல பிள்ளைகள் அடையாளமாகச் சொல்லிக் கொள்ளாமலே நழுவிப் போய் விட்டார்கள். குருநானக் தொடர்ந்து போகிறார். இன்னொரு ஊரிலே தொடர்ந்து மறுபடியும் பணமழை. இந்தத தடவை தங்கக் காசாக வந்து விழுந்தது. இதைப் பார்த்ததும மீதியிருந்த கும்பலும் கலைந்து ஓடிப்போய், தங்கக் காசை அள்ளிக் கொண்டு 'அம்பேல்' ஆகிவிட்டது.

குருநானக் திரும்பிப் பார்த்தார். கடைசியாக எஞ்சியிருந்தது ஒரே ஒரு சீடர்தான். செப்புக்காசு, வெள்ளிக்காசு, தங்கக் காசு எதையும் பொருட்படுத்தாது இவர் பின்னால் வந்தது அவர் ஒருவர் மட்டுமதான். ``நீ தானப்பா என்னுடைய உண்மையான சீடன்'' என்று சொலலி அவரை வாழ்தது அவரிடம் தன்னுடைய பணிகளை ஒப்படைத்தார் குருநானக். அவ்வளவு தான் அந்தக் கதை. இதைக் கேட்டதும் உண்மைக்கு ஏன் மரியாதை குறைந்து போயிற்று என்பது புரிகிறது.

நல்லவர்கள் பனனால் போகிற கூட்டம் குறைவதற்கு இது தான் காரணம். காசுதான் முக்கியம் என்று நினைக்கிறவர்கள அதிகமாகி விட்டார்கள் இந்தக காலத்தில் காசு முக்கியம் தான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் காசு நமக்கு அடிமையாக இருக்க வேண்டும். வேலைக்காரன் மாதிரி இருந்து வேண்டியதை வாங்கக கொடுக்க வேண்டும. நாம் காசுக்கு அடிமையாக ஆகும் போது தான் விவகாரம ஆரம்பம்.

இந்தக காலத்துக் குரு ஒருவர். அவருக்குப் பின்னாலும ஏகப்பட்ட சீடர்கள் இருந்தார்கள். ஒரு காலத்திலே ஒவ்வொரு கட்டத்திலே ஒவ்வொருவராக நழுவிப் போய் வீட்டார்கள். இப்போது மிஞ்சி இருப்பது ஒரே ஒரு சீடன் தான். மிகவும பவ்யமாகக் கையைக கட்டிக்கொண்டு அவர் முன்னால் உட்கார்ந்திருந்தான். ``கடைசியிலே நீ மட்டுமாவது இருக்கிறாயே அது போதும். நீ தான் எனக்கு உண்மையான சீடன்'' என்றார் குரு. அதறகு அந்த சீடன் ``அப்படி இல்லை சுவாமி! நீங்கள் இப்பொழுது உட்கார்ந்து கொண்டிருக்கிற பீடத்துக்கு அடியில் பெட்டியில் பணம் வைத்திருக்கிறீர்கள். அது எனக்குத் தெரியும். அதனாலே நீங்கள் எப்போது எழுந்துஅந்தப் பக்கம் போவீர்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## மருதங்கேணி ஆஸ்பத்திரிக்கு நிரந்தர வைத்தியர் இல்லை

(தும்பளை)

மருதங்கேணி வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடமோ அன்றி நிரந்தர வைத்தியரோ இன்மையால் மீளக்குடிய மர்ந்த அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமப்படுகினறனர்.


மந்திகை மருத்துவமனை வைத்தியர்கள் வாரத்தில் இருதடவை இவ் வைத்தியசாலையில் சேவையினை மேற் கொள்கின்ற போதிலும், இச் சேவை போதியதாக இல்லை என சம்பந்தப் பட்ட மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இம்மக்களின் மருத்துவ தேவையினை ஓரளவுக்காவது பூர்த்தி செய்யும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர் இப் பகுதியில் நடமாடும் வைத்திய சேவையை இடையிடையே வழங்கி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-245)

# சமாதான முயற்சிகள் விரைவில் குறித்த இலக்கை எட்டும்

## பிரதமர் ரணில் நம்பிக்கை



(கொழும்பு)

ஜப்பானின் பொருளாதார உதவிகளும், நோர்வேயின் அரசியல் ஒத்துழைப்பும் நாட்டின் சமாதான நடவடிக்கைகளுக்கு உந்து சக்தியைத தந்துள்ளன.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் எத்துல் கோட்டே பகுதியில் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து· கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

இச் சமய நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், யுத்தம் காரணமாகச் சீரழிந்து போயுள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஜப்பான் போன்ற நாடுகள் வழங்கும் உதவிகள் சமாதான நடவடிக்கைகளுக்கு மேலும் பலம் சேர்ப்பவையாக உள்ளன.

வெளிநாடுகளும், சர்வதேச அமைப்புகளும் வழங்கும் நிதிஉதவிகள் மூலம் பல்வேறு புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதோடு, வேலை யில்லா இளைஞர் யுவதிகளிற்கு வேலை வாய்ப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியடையும் சாத்தியக் கூறுகளும், நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, இதன் காரணமாக உதவி வழங்கும் நாடுகளின் உதவு தொகைள் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதுடன், இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவுகட்டியெழுப்ப முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (உ-8)

### அதிஉயர் பாதுகாப்பு வலய விவகாரத்தை

# சமாதான எதிர்ப்பாளர்கள் சிலர் சார்தகமாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர்

*அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அதிருப்தி*



(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது சம்பந்தமான பிரச்சினையை வைத்து சமாதான முயற்சிகளைக் குழப்ப சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன. இது ஒரு போதும் வெற்றிபெற மாட்டாதென அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிஉயர் பாதுகாப்பு வலய பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தும் விடயத்தில் அரசாங்கம் தெளிவாக உள்ளது. வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளின் அறிக்கை கிடைக்கப் பெற்ற பின் அவ்வறிக்கையின் பிரகாரம அரசாங்கம் செயறபடவுள்ளது.

இது தொடர்பாக தாய்லாந்தில் நடைபெற்ற நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை தாய்லாந்தில் ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்ததையும், அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை ஜப்பானிலும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, யூலை மாதத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜப்பானில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட் டுள்ளன என்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)

## இராசி பலன்

**18. 01. 2003**

**(தை 4, சனி)**

| | |
|---|---|
| பூரணை | பி.ப 4.57 வரை |
| புனர்பூசம் | பி.ப 3.48 வரை |
| இராகுகாலம் | 9.35 - 11.05 |
| சுபநேரம் | 3.35 - 5.05 |

**பூரணை விரதம்**

**மேடம்**
காரிய தாமதம், தொழில் நிலை மாற்றம், கடும் வார்த்தை, திடீர் நன்மை

**இடபம்**
அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், போசன சுகம். வாகன சுகம்

**மிதுனம்**
தனவரவு, குடும்பத்தில்மகிழ்ச்சி, தொழில் கஷ்டம், முயற்சி தாமதம்

**கடகம்**
விருந்துபசாரம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், தெய்வ சிந்தை.

**சிங்கம்**
காரிய அலைச்சல், சயன சுகக் குறைவு, பெரியோர் சந்திப்பு, சுபசெலவு.

**கன்னி**
குடும்ப சுகம், தனலாபம், பெருமையான சம்பவம், காரிய நன்மை.

**துலாம்**
அதிகாரம், தொழில் மேன்மை, நல்ல செய்தி, அதிக பிரயாசை.

**விருச்சிகம்**
கட்டுப்பாடு, சகோதரர் உதவி, புதிய திட்டம், முயற்சி தாமதம்.

**தனுசு**
எதிர்பாராத பிரச்சனை, காரியதடங்கல், சிறுவியாதி, வாக்குக் கலகம்.

**மகரம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய சித்தி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம்.

**கும்பம்**
பகைவர் நேசம், உடல் நலம், சந்தோசமான நிகழ்வு, முயற்சி பலிதம்.

**மீனம்**
உறவினர் வருகை, தேவையற்ற மனஸ்தாபம், தொழில் நன்மை, உடல்நலக்குறைவு

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்**

# சூதாட்டக் களரிகளுக்கான வரி விதிப்பில் மாற்றமில்லை

### பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கசினோ சூதாட்டக்களரிகள் மீது வரிவிதிப்புக்களில் மாற்றம் செய்யப் பட்டிருப்பதாக வெளிவந்த செய்திகள் தவறானவை எனவும் 12மில்லியனாக இருந்த இந்தவரியை 50ஆயிரம் ரூபாவாக அரசாங்கம் குறைத்திருப்பதாக எதிர்க்கட்சிகள் செய்த பிரசாரத்தைப் பிரதிநிதியமைச்சர் பந்துல குணவர்த்தன நிராகரித்துள்ளார்.

இதுவரையும் வரிக்குள் அகப்படாதிருந்த விளையாட்டொன்றின் மீது புதிதாக 55ஆயிரம் ரூபா வரிவிதிக்கப்பட்டிருக்கிறது என்பதே உண்மை. கடந்த அரசாங்கம் கசினோ களரிகளுக்கு ஆண்டுக்கு 25மில்லியன் ரூபாவை விதித்திருந்தது.

அத்தொகை மிகவும் உயர்வானதால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்காமலே போய்விட்டது. இதன் காரணமாக அதன் வரி 1.2மில்லியனாகக் குறைக்கப்பட்டதன் பின்னர் இப்போது நலல வருமானம் கிடைத்து வருகிறது.

ஊடகங்களில் விளம்பரம் செய்யும் விளையாட்டு நிறுவனங்கள் மீதான வரியே 5இலட்சத்திலிருந்து 3இலட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது வரவு செலவுத்திட்டத்தின படியானதாகும் என்று பிரதி நிதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# அபிவிருத்தி லொத்தர் சபைக்கு வயது 20

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபை 19ஆம் திகதியுடன் 20ஆண்டுகளைப் பூரத்தி செய்கிறது. 1983ஜனவரி 19ஆம் திகதி செயறபடத்தொடங்கிய இந்த லொத்தர் சபை 20ஆண்டுகளை நிறைவு செய்வதையிட்டு 20புதிய லொத்தர்களை அறிமுகம் செய்யவிருக்கின்றது.

வழக்கமான பரிசுகளை விட, ஒரு வருடத்திற்கு ஒருவருக்கு மாதம் 3ஆயிரம் ரூபாவை வழங்குதல், இம்மாதம் 19ஆம்திகதி பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஆயிரம் ரூபா பெறுமதியான சேமிப்புக் கணக்கை ஆரம்பித்துக் கொடுத்தல் போன்றவற்றை லொத்தர் சபை வழங்கவிருக்கிறது.

லொத்தர் சபை பல மில்லியன்களை ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்குவதுடன், பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப பரிசில்களையும வழங்கிவருகிறது. இப்பொழுது வடக்கு கிழக்கிலும் தனது சேவைகளை விஸ்தரித்து சுய வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகிறது. (உ)

# கூட்டணியின்மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று

(வவுனியா)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டப் பொதுசன அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு கூட்டணித் தலைவரும் எம்.பியுமான வி.ஆனந்தசங்கரி தலைமை வகிக்கவுள்ளார்.

இக் கூட்டத்திறகு அனைத்து உறுப்பினர்களையும் வருகை தருமாறு கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் எம்.பி கேட்டுள்ளார். (வ)

ஆற்றுவார் ஆற்றல்இகழாமை போற்றுவார்
போற்றலுளெல்லாம் தலை

குறள்.

# வலம்புரி

## உலகின் கவனம்

ஒருகாலத்தில் ஈழத் தமிழர்கள்பற்றி உலக நாடுகள் பொருட்படுத்தியதேயில்லை. ஆனால் இப்போது உலகநாடுகளின் பார்வை திசை திரும்பியுள்ளது. சர்வதேச பொது அமைப்புக்கள் முதல், உலகவங்கிவரை ஈழத்தமிழர்களின்விடயம் குறித்து ஆராய்ந்துவருகிறது. அதுமட்டுமன்றி உலகப்பொது அமைப்புக்கள் தமிழீழவிடுதலைப் புலிகளைச்சந்தித்து அவர்களுடன்பேச்சு நடத்துவதில் மிகுந்த ஆர்வம் உடையனவாக உள்ளன. இந்நிலை சர்வதேச ரீதியில் தமிழர்களுக்குக் கிடைத்த முக்கியத்துவம் என்பது இங்குபுலனாகிறது.

இலங்கைஅரசு தமிழ் மக்களை நசுக்கியபோது மௌனம்சாதித்த சர்வதேசநாடுகள், தமிழர் திரண்டெழுந்து போராடியபோது விழித்துக் கொண்டன.

சர்வதேசத்திற்கே யுத்தவியூகத்தைப் புகட்டக்கூடிய போராட்டம் ஈழத்தில் இடம்பெறுவது கண்டு வல்லரசுகள் சுறுசுறுப்படைந்தன. இனியும் சும்மாவிட்டால் இலங்கைத்தீவு இரண்டுபடுவதுமட்டுமல்ல, வல்லரசுகளின்பலமும் பலவீனப்பட்டுவிடும் என்ற அச்சம் அவர்களை பற்றிப்பிடித்தது.

இதன் வெளிப்பாடாகவே, உலக நாடுகள் இப்போது கிளிநொச்சிக்குப் படையெடுக்கின்றன. விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேச்சுநடத்துவதே தத்தம்மதிப்பை உயர்த்தும்என்ற உணர்நிலையை வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் காண முடிகிறது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் சமாதான முயற்சியைஅடுத்து உலக வங்கி தனதுநேரடி அவதானிப்பை வடக்குக் கிழக்கில் மேற்கொள்வதற்கு ஆர்வப்பட்டுள்ளது. இதேபோல்ஜப்பான் அரசும், தமிழர்வாழ் தாயகத்தில் தனதுஉதவியைவழங்க முன்வந்துள்ளது இவை விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்திற்கும், உச்சத்திற்கும்கிடைத்த வெகுமதி பாகும்.

நிலைமை இவ்வாறு இருக்கும்போது உள்ளக சுயநிர்ணயஉரிமை நாட்டைஇரண்டாகப் பிரிக்கும்என்பது நாட்டை நிரந்தரமாகவே பிரித்து விடும்.

# ஸ்ரீ.சு.க. மக்கள் விடுதலைமுன்னணி மற்றொரு சந்திப்பு திங்களன்று

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான மற்றொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பேச்சுவார்த்தைகளின் போது நாட்டின்தற்போதைய அரசியல், மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இதேவேளை, இவ்விருகட்சிகளும் இணைந்து கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் இதில் ஆராயப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இப்பேச்சுவார்த்தைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக ஜனாதிபதி சந்திரிகா தலைமையில், கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால ஸ்ரீசேன பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமர ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணி சார்பாக அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையில், விமல் வீரவன்ச உட்பட மற்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விரு கட்சிகளும் இணைந்து கூட்டணி ஆட்சி ஒன்றை அமைப்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அண்மையில் லண்டன் சென்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்காவை சந்தித்து பேசியிருப்பதாக செய்திகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# விளையாட்டு முற்றம் அமைக்குக

(சுதுமலை)

இளவாலை மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலைக்கு விளையாட்டு முற்றம் ஒன்றினை அமைத்துத்தரும்படி பாடசாலை அதிபர் வலி தென்மேற்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (உ-252)

# சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பது சமாதானமுயற்சிக்கு பிரதிகூலமானது

## கண்காணிப்புக் குழுத் துணைத் தலைவர்

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களை தமது அமைப்பில் வலுக்கட்டாயமாக சேர்த்து வருகின்றனர். இவ்வாறு சிறுவர்களை தமது அமைப்பில் சேர்ப்பதில் புலிகள் அமைப்பின்தனிப்பட்டசிலரே ஈடுபட்டுள்ளனர் புலிகளின் தலைவர்களுக்கு இது தெரியாமல் நடக்கிறது

இவ்வாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் துணைத்தலைவர் ஹக்லண்ட் நேற்றுமுன்தினம் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைக்குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜனவரி மாதத்தில் எமக்குக் கிடைக்கப் பெற்ற 15 முறைப்பாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பான 11 புகார்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே, விடுதலைப்புலிகள் இது தொடர்பான தங்களது செயற்பாடுகளை நிறுத்தவில்லை என்றே கூறுவேன்.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம்வரை 603முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப் பெற்றன.

தமது அமைப்பில் இணைந்த சிறுவர்களை விடுதலைப் புலிகள்பலமுறை விடுவித்திருக்கிறார்கள ஆனால் அவை பற்றிய சரியானபுள்ளிவிபரங்கள்பற்றி எனக்குத் தெரியாது; ஏனெனில் சிறுவர்களை புலிகள்படையில்சேர்ப்பதைக் கண்காணிப்பதே எமது தலையாய வேலையல்ல. சிறுவர்களைபடையில்சேர்ப்பது தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்து அவற்றைபுலிகளின் தலைமையகம் மற்றும் யுனிசெவ் ஆகியவற்றுக்கு அனுப்பிவைக்கின்றோம என்றார்.

கிழக்கு மாகாணத்தில், சிறுவர்களை புலிகள் அமைப்பில்சேர்ப்பதற்கு புலிகளின் தளபதி பாடசாலைகளில் பிரசாரம் செய்வதாக வெளிநாட்டு ஊடகங்கள் கூறுகின்றன இது பற்றி நீங்கள் புலனாய்வு செய்கிறீர்களா என கேட்கப்பட்ட போது:

நாங்கள் எது பற்றியும் புலனாய்வு செய்வதில்லை. சம்பவங்களைப் பற்றி விசாரிப்போம் அவ்வளவுதான். புலனாய்வுக்கும் விசாரணைக்குமிடையே நிறையவித்தியாசங்கள் உள்ளன.

எங்களுக்கு வரும் புகார்களை நாங்கள் ஆராய்கிறோம். கிழக்குப் பிராந்தியத்தில் மட்டுமல்ல வடக்கிலும் சிறுவர்களை படையில் சேர்க்க புலிகள் முயன்று வருகிறார்கள.

இதற்கான பிரசாரம் நடைபெறுகிறது. சமாதானமுயற்சி முக்கிய கட்டத்தை அடைந்து வரும் இந்தவேளையில் சிறுவர்களை படையில் சேர்ப்பது சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு அனுகூலமாக இருக்காது; இது விடுதலைப்புலிகளுக்கு எதிர்மறையான விளைவுகளையே உண்டுபண்ணும் என்றே நாங்கள் கருதுகின்றோம் என்று அவர் மேலும் கூறினார். (த)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு கூட்டுறவுஅபிவிருத்தி திணைக்களங்களில் உதவிக் கணக்காய்வாளராக கடமையாற்றுபவர்களுக்கான மேற்படிகலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முப 10.00மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைவரும் தவறாது சமூகளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (வ)

# சுகாதார விழிப்புணர்வுப் படக் காட்சி

(சுதுமலை)

மானிப்பாய் - சங்கானை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் சுகாதார விழிப்புணர்வு படக்காட்சி இடம்பெற்று வருகிறது.

இப்பணியில் ஈடுபடும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மானிப்பாய் ''அருள் மனை'' இல்லத்தில் கடந்த வியாழனன்று உணவுச் சுகாதாரம் தொடர்பான வீடியோ படக்காட்சியும் காண்பித்தனர்.

அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளிலும் இப் பிரசார நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. (உ-252)

## தினசரி தியானம்

### சகிப்புத் தன்மை

அந்தி மங்கும் நேரத்தில் தன் சிதறிய கிரணங்களை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு அடிவானத்தில் கலக்கிறான் சூரியன் அது போலவே, உன் மனத்தின் சிதறிய சிந்தனைகளை எல்லாம் ஒன்று திரட்டி எல்லாம் வல்ல இறைவனின் பதும பாதங்களில் செலுத்து, மனதை விருப்பம் போல் திரிய அனுமதிக்காதே. அதனால் சகிப்புத் தன்மை பெறலாம். மேம்பட்ட ஆத்மீக அறிவையும் அடையலாம்.

- சுவாமி சிவானந்தர்

# சுவாமி விவேகானந்தர் ஜயந்தியை ஒட்டிய ஆன்மீக எழுச்சிவிழா

(யாழ்ப்பாணம்)

சுவாமிவிவேகானந்தர்ஜயந்தியை ஒட்டிய ஆன்மீகஎழுச்சி விழா இன்று காலை 9 30 மணிக்கு நல்லூர்துர்க்கா மணிமண்டபத்தில் யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் உபஅதிபர் இ. சிவராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகணானந்தா கலந்துகொள்ளவுள்ளார்.

வரவேற்புரையை மதுரகவிகாரை எம். பி. அருளானந்தனும், ஆசியுரையை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து, ஜீவசேவையே சிவசேவைஎன்னும் விடயத்தில சுவாமி சித்ரூபானந்தாவும், சுவாமி விவேகானந்தரின் சமூகவியல் தத்துவங்கள் என்னும் விடயத்தில் இ இராஜமகேந்திரமும் விசேட சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்புச் சொற்பொழிவை சுவாமி ஆத்மகணானந்தா ஆற்றவுள்ளார்.

முன்னதாக சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் நல்லூர் கந்தன் ஆலயத்தில் இருந்து வீதிவலமாகஎடுத்துச் செல்லப்படவிருப்பதும் குறிப்பிடத்தக்கது (உ)

# சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக வார பேச்சு - கவிதைப் போட்டி முடிவுகள் வெளியாகியது

(மானிப்பாய்)

சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக எழுச்சி வாரத்தை ஒட்டி நடாத்தப்பட்ட பேச்சு, கவிதைப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பேச்சுப் போட்டி

கீழ்ப்பிரிவு; முதலாமிடம் செல்வி ஜஸ்மிதா (வேம்படி மகளிர் கல்லூரி) இரண்டாமிடம் செல்வன் தவசீலன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

மேற்பிரிவு: முதலாமிடம் த.தயாபரன் (கொட்டடி) இரண்டாமிடம் இ கேதாரசர்மா (யாழ்இந்துக்கல்லூரி) மூன்றாமிடம கே.கவிதரன் (சண்டிலிப்பாய்)

கவிதைப் போட்டி:

முதலாமிடம் த.அஜந்தாஜினி (வேம்படிமகளிர்கல்லூரி) இரண்டாமிடம் வி.யாழினி (வேம்படி மகளிர் கல்லூரி) மூன்றாமிடம் க.ஜெவதனி (சங்கானை)

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்று காலை 9-30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக எழுச்சிவிழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (த-232)

# 'சி++' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

என். செல்வகுமாரினால் தமிழ் மொழியில் எழுதப்பட்ட கணனி உலகில் உயர் நிலை வகித்து வரும் மொழியான சி++ நூல்வெளியீட்டு விழா, ஐ.ஐ.எஸ், நிறுவன ஏற்பாட்டில அதன் இயக்குநர் கே.விக்னேஸ் தலைமையில் இன்று பி.ப 3.30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில்இடம் பெறவுள்ளது.

பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (உ)

# ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை!

## இல.தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குக கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயிரம் தொண்டராசிரியர்களை நிரந்தர நியமனம் ஆக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

பொதுச் சேவை ஆணைக் குழு இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாகவும்,இதனையடுத்து மனித வள அபிவிருத்தி கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் நாணயக்கார,இதற்கான நிதிஒதுக்கீட்டை உடனடியாக மேற் கொண்டு,பதில் அனுப்பி வைக்குமாறு,திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்தைக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும்,கடிதத்திற்கான பதில் கிடைத்ததும் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்படுமென்று,கல்வி அமைச்சின் துணை செயலாளர் திஸநாயக்கா இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு அறிவித்துள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தொண்டர் ஆசிரியர்கள் தமது நியமனத்தை நிரந்தரமாக்குமாறுகோரி,மறியல் போராட்டங்கள்,பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை எனவும்,நியமனங்கள் உரிய நேரத்தில் வழங்காவிட்டால் பெப்ரவரி மாத முற்பகுதியல் வடக்கு கிழக்குமாகாணம் தழுவியரீதியில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும்,இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (இ-5)

### இந்தியாவில் தங்கியிருந்த
# 34 ஈழத்தமிழ் அகதிகள் நேற்று விமானம் மூலம் நாடு திரும்பினர்.

(சென்னை)

இந்தியாவில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் அகதிகளில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேர் நேற்று விமானம் மூலம் இலங்கையை வந்தடைந்தனர்.

சென்னைக்கு அருகே அகதி முகாமொன்றில் தங்கியிருந்த இவ் அகதிகள், சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் அவசரகாலக் கடவுச்சீட்டை பெற்றுக் கொண்டே இலங்கை திரும்பினர்.

இவர்களுக்கான விமானச் செலவினை ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் பொறுப் பேற்றுக் கொண்டது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானதையடுத்து, இலங்கைக்கு உரிய முறைப்படி திரும்பிய அகதிகளின் முதற் தொகுதி இதுவாகும்.

இதேவேளை இந்தியாவில் உள்ள 105 அகதிமுகாம்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாகத் தங்கியிருப்பது இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.

இது இவ்வாறிருக்க இராமேஸ்வரத்திலிருந்து சட்ட விரோதமாக இலங்கை திரும்புவதற்கு முற்பட்ட 11 பேரை இராமேஸ்வரம் பொலீசார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மதுரைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ)

## புதிய கட்டடம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய இந்து சமயப் பேரவையின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை காலை 11.30மணிக்கு யாழ்.வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பேரவைத் தலைவர் சு.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்திற்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.(ந-5)

## கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் காயம்.

(யாழ்ப்பாணம்)

கட்டுத்துவக்கு வெடிததததில் இடதுகாலில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முள்ளியவளை மாமூலையைச சேர்ந்த செல்வநாயகம் தியாகலிங்கம் (வயது 47) என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார். (த)

## சமய அறிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு நடாத்தும 2002ஆம் ஆண்டுக்கான சமய அறிவுப் போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு வடமாராட்சி,தென்மராட்சி,வலிகாமம்,தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் நடைபெறும் என குழுச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார். (த)

## சுகாதார அலுவலகம் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் இன்று காலை 8.30மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி எம்.ஏ.எல்.ரெஜி பெரேராவினால் இக்கட்டடம் திறந்து வைக்கப்படும். (த)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

படையினரால் கைதாகிக் காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கக் கூட்டம் இன்று காலை 9.30மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது (உ)

### புலிகள்...

இதற்கான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் அரசியலில் மட்டுமல்ல பல்துறையிலும் நிபுணத்துவம் பெற்றவர்கள் என்று கூறியஅமைச்சர் பீரிஸ்,

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக சதீஸ் நம்பியாரின் அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் காத்துள்ளது.அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் வரை அங்கு குடியமர்த்தப்படுவதை பின் தள்ளி வைத்துள்ளோம் இதில் விடுதலைப் புலிகளுடன் அரசு இணக்கம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வுத்திட்டங்களில் இனங்காணப்பட்ட 11 திட்டங்களுக்கு யப்பான் உதவி செய்ய முன் வந்துள்ளது.இந்த புனர்வாழ்வு உதவிகளை வடக்குக் கிழக்குக்கு மாத்ததிரமன்றி நாட்டின் சகல பாகங்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய வகையில் உதவி வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் தூதுவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். (ம)

### யப்பான்

கூறிய பிரதமர்,சமாதான முயற்சிக்ளை வலுப்படுத்தும் வகையில் யப்பானிய அரசு செயற்பட்டு வருவது வரவேற்கத் தக்க நடவடிக்கை என்றும்,யப்பானிய அரசு இலங்கை விடயத்தல் காட்டிவரும் அக்கறைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார். (இ)

# விளையாட்டுச் செய்தி

### வி.பி.கின்ண கிறிக்கெற் தொடரில்
# இங்கிலாந்து 19 ஓட்டங்களால் இலங்கை அணியை வென்றது

அவுஸ்ரேலியாவில் நடை பெற்று வரும் வி.பி.கின்ண ஒருநாள் முக்கோண கிறிக்கெற் போட் டியின் நேற்றைய ஆட்டத்தில் 19 ஓட்டஙகளால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

ஆடலைற் விளையாட்டு மைதானத்தில் நடை பெற்ற நேற்றைய ஆட்டத்தில் இலங்கை, இங்கிலாந்து அணிகள் மோதிக் கொண்டன.

நாணயச்சுழற்சி அடிப்படையில் இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தனது 50 ஓவர்களின் முடிவில் இங்கிலாந்து அணி 7விக்கெட் இழப்பிற்கு 279 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களின் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 260 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இலங்கை வீரர்களான சனத் ஜெயசூரிய 99 ஓட்டங்களுடனும் குமார் சங்கக்கார 56 ஓட்டங்களுடனும் ரசல் ஆனல்ட் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இங்கிலாந்து அணி வீரர்களான நிக்ரைற் 88 ஓட்டங்களுடனும் அலெக்ஸ்ருவைற் 51 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி வீரர்களான சமிந்தவாஸ், திலகார பெர்னாண்டோ,சமிலகமகே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும்,

இங்கிலாந்து அணி வீரர்களான அன்டிகனிக் 4 விக்கெட்டுக்களையும்,அன்ரசென் 2 விக்கெட்டுக்களையும்,ரொனி ராணி, கொலிங்வூட், மக்கல் வோன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

நேற்றைய போட்டியின் சிறந்த வீரராக இங்கிலாந்து அணி வீரரான அன்டி கனிக் தெரிவு செய்யப்பட்டார். (இ-5)

### பிரிட்டன்....

பேச்சு நடத்தினார்.

இச் சந்திப்பின் போது,இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதில் மேற் கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் பிரித்தானியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்புவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்குழுவினர் இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். கிளிநொச்சி விடயத்தை முடித்துக் கொண்டே அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். (த)

### பொங்கு தமிழ்....

வெளியிடப்பட்டது.

பிரகடனத்தை மண்டபத்தில் இருந்த அனைவரும் ஒரே குரலில் உணர்வு பூர்வமாக கோஷம் எழுப்பி உறுதி செய்தனர்.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் வவுனியா மாவட்ட பிரதிநிதியான விரிவுரையாளர் எஸ்.விந்தன்,மன்னார் மாவட்டப் பிரதிநிதி எம்.சீலன்,திருகோணமலைப்பிரதிநிதி எம்.விக்கினேஸ்வரன்,வன்னிப் பிரதிநிதி இளங்கோ,யாழ் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளார் வி.கவியன்பன், வண.பிதா எம்.ஜீ.இம்மானுவேல்மற்றும் பத்திரிகையாளர் டீ.சிவராம் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் கண்காட்சியை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி ப.கோபாலகிருஷண ஐயர் திறந்து வைத்தார்.

இதேவேளை தமிழீழ போராட்ட வரலாற்றில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் ஏற்படுத்தி மக்களை எழுச்சி கொள்ள வைத்த பெருமை யாழ.பல்கலைக்கழகத்திற்கே உரியதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-77,43)

### சதுரங்க...

16வது கர்ய் நகர்த்தலின் போது ஆட்டத்தைச் சமன் செய்ய சிவோதயன் ஒப்புக் கொண்ட போதிலும், அதனை நிரோஸ் நிராகரித்திருந்தமை ,இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்.சதுரங்க வீரர் சிவோதயன் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும்,இவர் பல்கலைக் கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவர்என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### அரச,தனியார்...

கரமாகஅமையாமையினால் சம்பள உயர்வை வழங்க முடியாது போய்விட்டது.இவ்வாண்டு பொருளாதாரத்தில் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளதனால் சம்பள அதிகரிப்பு சாத்தியமாகும்.

தனியார் துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பிற்காக வர்த்தக சபைகள் தொழிற் சங்கங்கள்,மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்த பின்பே அவர்களது சம்பள அதிகரிப்புத் தொடர்பாக முடிவுகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்த நிதியமைச்சர் இச் சம்பள அதிகரிப்பு பொரும்பாலும் அடுத்து வரும் இரு மாதங்களுக்குள் நடைமுறைபபடுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசு தற்போது ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (ம)

### ஆட்சியை...

இறைக்க எதிர்க்கட்சியினர் முடிவு செய்திருப்பதாகவும் பொது ஜன ஐக்கிய முன்னணியில் இணைபவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படுமென ஆசை காட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எதிர்க்கட்சியினரின் இம் முயற்சிக்கு பதவியிலிருக்கும் எந்த ஒரு அரசுக்கும் தமது வழமையான ஆதரவு வழங்கி வரும் மலையகத் தமிழ்க் கட்சி ஒன்றும் எதிர்க்கட்சியினரின் இம்முயற்சிக்கு பச்சைக் கொடி காட்டியிருப்பதுடன் அதற்கான இரகசியப் பேச்சுவார்த்தைகளும் நடை பெற்றுவருவதாகவும் தெரியவந்துள்ளது. (வ)




காரைநகர் வாரிவளவு கற்பக வினாயகர் ஆலய பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

வினாயுகர் அடியார்களே!

அடியார்களுக்கு வாரி வாரி வழங்கும் வாரிவளவு கற்பக வினாயகனுக்கு நிகழும் மங்களகரமான சித்திரபானு ஷூ தை மீ 5ம் நாள் 19.01.2003 நாளை ஞாயிற்றுக்கிழமை சித்தயோகமும் பூச நட்சத்திரமும் கூடிய பகல் 10.06 முதல் 11.36 வரையுள்ள மீனலக்கின சுபவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழ திருவருள் பாலித்துள்ளது.

அடியார்கள் கிரியா காலங்களில் ஆசார சீலர்களாகப் பங்கு கொண்டு எம் பெருமானின் திருவருளிற்கு பாத்திரமாகும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

வாரிவளவு
காரைநகர் c/5642 -ஆலய நிர்வாகஸ்தர்-

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை) உப தலைவர்

தவத்திரு சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ்

தைப்பூசத் தினத்தில் 19.01.2003(நாளை) பருத்தித்துறை சேவாச்சிரமத்தில் காலை 9மணிக்கு உயர்தர வகுப்புமாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் மாணவர்களுக்கான மேம்பாட்டுக் கல்வி என்ற தொடரில் சிறப்புரை நிகழ்த்துவார்.

-செயலாளர்-

c/5641

THE ROYAL COLLEGE OF JAFFNA

SPOKEN ENGLISH WITH GRAMMAR BY VIGNESWARAN ARCHERY

426(302)K.K.S Rd.JAFFNA

BLACK ROAD CHANKANAI

6466

MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்

திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.

X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள்.

சிறுநீர்ப்பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2003 இல் அச்சிட்டு ,வெளியிடப்பட்டது.